ரிஜிஸ்டர் நெ. 2041. 43 தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு மாசி-மீ 8-உ (19—2—1933) | மலர் 43.

## இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

### என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.

இஃது மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும சகுனமும், முதலியவைபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும் நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இதன் விலை அணா ... ... ... | 0—8—0 |
| குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... | 0—6—0 |

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## "கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம் —
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.



## Read.
## *The 'Citizen'*

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.



## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.
பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0

நாஸ்திகன்
C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.



## "SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.

Price annas. 0 2.0



Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
## By Dr. Paranjpye M. A., D. Sc.

———)o(———

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.



## குஷ்டம்

வெண்குஷ்டம் பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலிஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)



## 'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை
ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0
விலாசம்;—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.



## "சன்மார்க்கன்"

வாசக நேயர்களுக்கு

இடமாறுதலுக்காக எதிர்பார்த்திருந்த அரசாங்கத்தாரானுமதி கிடைத்து விட்டது. இனிநாளிதுவரையும் விட்டுப்போன பிரதிகளுடன் பக்கம் அதிகப்படுத்தி அடுத்ததிங்களிலிருந்து பத்திரிகை தவறாது வெளிவரும்

ஆண்டு சந்தா:—
உள்நாடு ரூ 1—0—0
வெளிநாடு ரூ-1—8—0.
தனிப்பிரதி ரூ-0—2—0.

(ஆசிரியர்)
சுவாமி சிவநேசம்.
"சன்மார்க்கன்" திண்டுக்கல்



## சுயமரியாதை
## சங்கரத்தினத் தெம்மாங்கு.

இது விருதுநகர் 3வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை ரூ. 0-1-0
,, 12க்குத் தபாற் செலவுள்பட ,, 0-12-0
,, 100க்கு ,, ,, 5-4-0
தனிப்பிரதி வேண்டுவோர் 0-1-6

அணா ஸ்டாம்பு அனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கல்வார்பட்டி..
காசிபாளையம்.போஸ்டு,
[திண்டுக்கல் வழி]



## சுயமரியாதை
## இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் 1 ஈ. வெ. ராமசாமி, 2 ஊ. பு. அ. சௌந்திரபாண்டியம், 3 ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யம், 6. ஈ. வெ. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம் 8. சிவகாமி, சிதம்பரனார் 9. குருசாமி-குஞ்சிதம், 10. நீலாவதி—ராமசுப்பிரமணியம் 11. பொன்னம்பலம், 12. சிவானந்தம். 13. அருணகிரி சுந்தரி, ஆகியவர்களின் போட்டோ படங்கள் $6\frac{1}{2} \times 4\frac{3}{4}$ சைஸ்படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ ரா. $8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ 1-க்கு 1—0—0. மொத்தமாய்வாங்கு கிறவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் $8\frac{1}{2}$ - $6\frac{1}{2}$ சைசில் உள்ள படம் ரூ 1—0—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு



## ஈ. வெ. ராமசாமியின்
## இலங்கை
## சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100- புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ. அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
'குடி அரசு" ஈரோடு.



## மூன்று மாதத்தில்
## மோட்டார் ஓட்ட
## கற்றுக் கொள்ளலாம்.

(1916 ௵ ஸ்தாபிக்கப் பட்டது.)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும், பூட்டவும்கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்த பின் கவர்மெண்ட் லைசென்சும், பாடசாலை சர்டிபிகேட்டும், கொடுக்கப் படும். மோட்டார் மெக்கானிக் தமிழ் புத்தகம் 50 படம் 200 பக்கம் விலை ரூ. 2—0—0. விபரத்துக்கு எழுதவும்.

தென் இந்தியா மோட்டார்
இஞ்சினீரிங் ஒர்கஸ் & பாடசாலை,
மயிலாப்பூர் P. O. சென்னை.

# தோழர் பர்னட்ஷா.

தோழர் பெர்னட்ஷாவிடம், "ஜான் புல்" என்ற ஓர் ஆங்கிலப்பத்திரிகை ஆசிரியர் ரஷியா ஐந்து வருடத்திட்டத்தின்பயனாய் அடைந்த ஏற்றத்தினால்பெரிதும்பாதிக்கப்பட்டவல்லரசுகள் ரஷியாவினிடம் வலியச்சென்று நட்புரிமை செய்து கொள்ளுவது சிறப்புடையதா? அல்லது வியாபாரச் சிக்கனமுறை எனும் போரால் அதை ஒழிக்க முயற்சிப்பது சிறப்புடமையா? என்று வினவியதற்கு தோழர் ஷா அளித்த மறுமொழி:—

வியாபார உலகின்று முதலாளித்துவஅரசுகள்ரஷியாவைஒதுக்கிவைத்தது பெரும் மடமைத்தானமாகும். ஐரோப்பிய பெரும்போரிற்குப்பின் தங்கள் சொந்த வியாபாரங்களைக்கூட செம்மையான முறையில் நடத்த முடியாமல் திணறுகின்றது; என்பதை இது நன்குணர்த்துகிறது. சமதர்ம ருஷியாவை முதலாளித்துவ அரசாங்கம் ஒதுக்கி வைத்ததானது அந்நாட்டிற்கு எதிர்பாராத நலனைக் கொடுத்தது.

ஏனென்றால் முதலாளித்துவ வல்லரசுகள் ருஷியாவோடு வியாபார ஒப்பந்தம் செய்திருப்பின் நிச்சயமாகவே அவைகள் வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் பெரும் நோயினின்று தப்பி ருஷியாவின் கைத்தொழிலைக்கவர்ந்திருக்கும் "சமதர்மம்" என்னும் மொழியைக் கேட்டதும் கிடுகிடென நடுங்கும் இம்முதலாளித்துவ அரசாங்கங்கள் ருஷியாவை ஒதுக்கி விட்டதால் அது பிறர் உதவியின்றித் தம் உடலையும், உயிரையும் உரம்பெறச் செய்துகொண்டது.

ஆகவே சோம்பல். மூடநம்பிக்கை, அடிமை எண்ணம் முதலிய தீக்குணங்கள் படிந்த ஸார் காலத்திய தீய ருஷியா இப்பொழுது சுறுசுறுப்பு, தூய்மை, பகுத்தறிவு, சுதந்திரம், சாந்தி முதலிய அருங்குணம் பெற்ற சமதர்ம நோக்கமுள்ள, தன்னறிவு மிக்க நன்னாடாய் பொலிவுற்று விளங்குகின்றது.

கனவிலும் நனவிலும் நாடு பிடிப்பதிலே நாட்டம் கொண்டு வாழும் பேராசைபிடித்த கொள்ளைக்கார முதலாளித்துவ அரசாங்கங்கள் தாங்கள் பணவலி, படைவலி, முதலிய பல வலியாலும் பிறநாடுகளை கொள்ளையடித்தது போல் தங்களைப்போன்று எல்லா சாதனங்களையும் பெற்றிருக்கும் ருஷியா எப்போது தாங்கள் முன் செய்து வந்த வழியைப்பின்பற்றித் தங்களிடம் நடந்து விடுமோ என்ற பயத்தால் நடு நடுங்குகின்றன.

தங்கள் உழைப்பின் பயனை தாங்களே அனுபவிக்கப்போகிறோம் என்ற எண்ணத்தின் பயனால் உண்டான ஊக்கத்தினால் ஐந்து வருடத்தில் வெற்றிபெற உழைத்தரஷியா அதன் பலனாய் குறைந்தநேரம்வேலைசெய்து நிறைந்த ஊதியமடைந்தனர். தங்கள் முன்னோர்கள் நினைத்துமிராத கல்வியும் சரிசமத்துவமும் பெற்றிருப்பதோடுஇன்னும் தாங்கள்வேலை செய்யவேண்டிய நேரத்தை குறைந்தும் அதனால் அதிக லாபமும் பெறவும் எதிர்பார்க்கின்றனர். சிறிது காலத்தில் தம் வாழ்க்கையை துன்பமும் கவலையும் இல்லாத இன்ப வாழ்க்கையாய் மாற்றிவிடலாம்என்று எண்ணுகின்றனர்.

இந்த நன்னிலை அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ உண்டாதல் அரிதினும் அரிது. ஏனென்றால் அங்கு கஷ்டப்பட்டுத் தொழிலாளர்கள் உழைத்துழைத்து வந்ததால் அதனால் அவர்கள் உடம்பினின்று வரும் இரத்த வியர்வையில் முதலாளிகளாகியசோம்பேறிகள் மூழ்கிகஷ்டமின்றி ஸ்நானம்செய்யஎண்ணுவார்களென்பதையும், பிரதிபலனாகத் தங்கள் வீட்டுவாடகையை உயர்த்துவார்களென்பதையும் நன்குணர்வார்கள். தொழிலாளர்கள் இச்சோம்பேறிகட்கு உழைப்பதின் பலன் அவர்கட்கு ஆயுட்குறைவு என்பதைத் தவிர வேறுஒன்றும் கிடையா.

வல்லரசுகள் ஐரோப்பியப் போரில் இயற்கை முயற்சியிலும் தங்களைக்காப்பாற்றிக்கொள்ளப் போதிய வெடி குண்டு செய்தல் முதலிய செயற்கை முறையிலும் தம் திறமையின்மையை உலகிற்குக் காட்டிவிட்டன. "நாய் தான் கக்கிய உணவையே உண்ணமுயலும்" "பன்றி மலத்தையே தின்ன விரும்பும்" அது போல் நாம் (முதலாளித்துவ அரசாங்கங்கள்) எப்பொழுதும் இழிவான லட்சியத்திலேயே கிடக்கின்றோம்.

சமதர்ம ருஷியாவின் ஐந்து வருடத் திட்டத்தின் வெற்றியும் பொதுவுடமையால் ருஷியாவிடுதலை பெற்றமையும் நாம் கற்கவேண்டிய இரண்டாம்படிப்பினையாகும். (முதலாளித்துவ ஆட்சியால் நாம் கண்ட முதற்படிப்பினை--ஐரோப்பியப் பெரும் போர்தான்.)

நாம் பிறரிடமிருந்து கற்க வேண்டிய தொன்றுமில்லை யென்னும் பருவத்தையடைந்து விட்டோமா?

## ஷாவின் சொற்பொழிவு.

சுயேச்சைத் தொழிலாளர் கழகக் கோடை பாடசாலை முன்னிலையில் தோழர் "ஷா" செய்த சொற்பொழிவின் சாரம்:—

ருஷியா நரகாக்கினிக் காப்புப் பெற்ற (Hell fire proof) நன்னாடு. பணக்காரனும்,பணக்காரியுமற்ற ஒரு நாட்டிற்கு (ருஷியாவிற்கு) நான் சென்றுமிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் அச்சமதர்ம நாட்டைவிட்டு இங்கு திரும்புங்கால் எனது கால்கள் நடுநடுங்கியது. (இவ்வாறு கூறும்போது அவர் கண்கள் களிப்பு மிகுதியால் ஜொலித்தன.)

என்றைக்காவது ஒருநாள் பொதுவுடமை ஆட்சி முறைக்கு கட்டுப்பட்டு அதன் திட்டங்களை நிறைவேற்ற சர்வாதிகாரம் (Dictatorship) என்னும் முறையை கிரேட்பிரிட்டனும் தழுவிந்தான் ஆக வேண்டும். நமது பிரிட்டிஷ் ஜனநாயக ஆட்சிமுறை (Democracy) யாதொரு பயனுமளிக்கப்போவதில்லை. நாம் முட்டாள்களாய் இருக்கிறோம் என்பதை ருஷியர்கள் நம்ப மறுக்கிறார்கள். அறிவாளிகளான பிரிட்டிஷார்களுக்குஇந்தமுறை.(இச்சட்டம்) தெரியாதிருக்குமா என்று தோழர் ஸ்டாலின் எம்மிடம் கூறினார். எங்கள் மக்கள் அறிவிலிகள் என்பதை நீர் முதன் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று நான் மொழிந்தேன். பொது உடமைக் கொள்கையின் நலனை அறியா மக்கள் உலகிலிருக்கிறார்கள் என்று தோழர் ஸ்டாலின் கருதவே யில்லை. ருஷிய பொது உடமை அரசியலின் நிபுணர்கள் பரந்த நோக்கும் சிறந்த அறிவு முடையவர்களா யிருக்கின்றனர். மார்க்ஸ் நூற்களை. நன்கு பயின்றிருக்கின்றனர்.

தோழர் ஸ்டாலின் என்னை நோக்கி, (முதலாளித்துவ முடையோர்கள்) எங்களைப் பேடிகளென்கின்றனர். ஆனால் அனுபவத்தில் நாங்கள் அதற்கு மாற்றமாய் இருக்கின்றோம். என்று கூறினார். நான் தோழர் ஸ்டாலினிடம்பேசியபோது,முதலாளித்வ அரசாங்கம் ருஷ்யாவோடு போரிட முயற்சிக்கிறதாக ருஷ்ய மக்கள் எண்ணுவதாக அறிகிறேன்.

ஆனால் "ஒன்றுக்கும் அஞ்சற்க" எங்கள் அரசாங்கம் போர் புரிய முன்வர மாட்டார்கள் என்று கூற என்னால் முடியாது என்றாலும் மற்ற நாட்டு பொது ஜனங்கள் போர் புரிய விரும்பவில்லை" என்றேன். அதற்கு அவர் ஆனால் பொது மக்களால் இது காறும் சர்ச்சில் போன்ற போர் வெறியர்களால் நினைத்த பொழுதெல்லாம் போரிடுவதைத் தடுக்க முடியவில்லையே என்றார். உடனே யான் ஆம் உண்மை தான்,தற்போது பேராபத்து ஒன்றுமில்லை என்றாலும் வீரர் க்ரோம் வெல் கூறியபடி "கடவுளை நம்புங்கள் இருந்தாலும் துப்பாக்கி மருந்தை தயாராய் வைத்திருங்கள்" என்று நான் உங்கட்கு கூறுகிறேன் என்றேன். தோழர் ஸ்டாலின் "ஆம் நாங்களும் அப்படியேதான் தயாராய்த்தான் இருக்கிறோம்" என்றார்.

## ருஷ்ய சட்ட சபை.

சட்ட சபை என்னும் வெறும் பிரசங்க மேடை ருஷ்யாவில் கிடையா. ஒரு வேலையைச்செய்து முடிக்க வேண்டுமாயின் அவ்வேலைக்குரிய டிபார்ட்மெண்டின் தலைமை அதிகாரி கட்டளை போடுகின்றார். அவரே அதற்குப் பொறுப்பாளியாயுமிருக்கின்றார். அவர்,தவறுதலாகநடந்தால் அவர் பாடு மிகச் சங்கடமே. அவர்கள் போக்கு . இத்தாலியர் போக்காகத்தான் இருக்கிறது. தோழர் ஸ்டாலின் இதைக் கேட்டால் நகைப்பார் என்று எண்ணுகிறேன். ருஷ்யாவின் மாறுதல்கள் யாவும் நிறைவாகவும் அழகாகவும் பொலிந்து விளங்குகின்றன. ருஷ்ய ஆட்சி முறையேனும் இயந்திர சக்கரத்தின் அச்சுகளில் எண்ணெய் இருக்கிறது. ஆனால் நமது அரசாங்கம் எனும் இயந்திரத்தின் சக்கரங்களின் மணல் நிறைந்திருக்கிறது. அதனாற்றான் ருஷ்ய அரசாங்க இயந்திரத் தேர் செம்மையாய்த் தடைப்படாது ஓடுகின்றது.

## ருஷ்ய திட்டம்.

ருஷ்யத் தொழிலாளர்களை விழித்து "தோள்கொடுத்துஉழையுங்கள்" ஒழியினும் ஒழிந்து போங்கள். பசியால் வாடினும் வாடுங்கள் ஆனால் ஐந்து வருடத் திட்டம் முடிவு வரை கஷ்டப்படுங்கள்" என்று பொது உடமை அரசாங்கம் கூறுகின்றது. ருஷ்யர்கள் பட்டினி யென்றால் இன்னதென்று உணரார்கள், ஆனால் ஆடம்பர உணவு அவர்கட்கு கிடையாது. இதை பிரிட்டிஷ் தொழிலாளர்கட்கு கூறினால் நாங்கள் ஏன் ஐந்தாண்டு கஷ்டப்பட்டு வயிற்றையும் வாயையும் கட்டி உழைத்து பணக்காரர்கள் கொழுப்பேறும்படி செய்ய வேண்டும்? என்பர். எங்கள் கொள்கை குறைய உழைப்பதும் நிறைய மணம் பெறுவதுந்தான் என்பார்கள். எனவே: பணக்காரர்கள் முதலாளிகளற்ற ருஷியா நாளுக்கு நாள்நன்னிலை யெய்திவருவதில் எவரும்ஆச்சரியப்படவழியில்லை. தொழில்களை அரித்துத் தின்னும் புழுக்களையும், புழுக்களைத் தின்னும் புழுக்களையும் (முதலாளிகளையும் பாங்கிக்காரர்களையும்) ருஷியர்கள் அழித்து விட்டனர்.

## மதமா?

என்னுடன் போந்திருந்த சீமாட்டியாகிய ஆஸ்டர், ஸ்டாலினைநோக்கி "உங்கட்கு சமயம் வேண்டாமா? மதமின்றி மக்கள் எப்படி உயிர்வாழ முடியும்?" என்றார். அதற்கு நான், "ருஷியர்கட்கு மீண்டும் மதம் வேண்டாம். ருஷியர்கள் மதத்தால் நிறைந்திருக்கின்றார்கள். ருஷியப் புரட்சியே ஆன்ம உணர்ச்சியோடு கூடிய ஓர் இயக்கம்" (மதம்) என்று மொழிந்தேன்.

ருஷியாவில் குழந்தைகளை எவரும் அடிப்பதில்லை. பெற்றோர்களாயினும் குழந்தைகளை அடிப்பராயின் உடனே வழக்குத் தொடரப்படும். அஃதோர் தண்டனைக்குரிய பெரும் குற்றமாகக் கருதப்படுகிறது.

அங்கு மரண தண்டனை கிடையாது. ஒருவன் கொலை செய்வானேயானால் ஐந்து ஆண்டுகள் தான் தண்டிக்கப்படுவான். ஆனால் எவனாவது தனித்த முறையில் வியாபாரம் (சூதாட்டம்) செய்து பணக்காரனாக எண்ணினானாயின் அவன்

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# அம்பெத்காரின் வெடிகுண்டு.

## ஆலயப்பிரவேசம் சுயமரியாதைக்கு விரோதம்.

### வருணாச்சிரமம் ஒழியாவிட்டால் வேறு மதத்திற்குப் போய்விடுவோம்.

ஆலயப் பிரவேச மசோதாவைப் பற்றி டாக்டர், அம்பெத்காரின் அறிக்கையின் சுருக்கம்:—

"தற்போது தோழர் இரங்கையரின்மசோதாவானது தாழ்த்தப்பட்ட வகுப்பார் ஆதரிக்கத்தகுந்ததாயில்லை. அதுமெஜாரிட்டியாரின் இஷ்டப்படி நடக்க வேண்டும் என்கின்ற கொள்கையை யுடையதாக விருக்கின்றது. இந்த மாதிரிகொள்கைகளால் பெரிய மாறுதல்களை உண்டாக்கிவிட முடியாது. ஆதலால் இது சனாதனதர்மிகளுக்ஷேமிசவும்அனுகூலமானது. இம் மசோதாவானது தாழ்த்தப் பட்டவர்களுக்கு கோயில் பிரவேசம் கொடுத்தாக வேண்டு மென்று நிர்ப்பந்தப் படுத்துவதில்லை. சீக்கிரத்தில்கிடைத்து விடுமென்று நம்புவதற்குமில்லை. கோவில் பிரவேசத்துக்கு மெஜாரட்டி ஓட்டு கிடைத்து விடுமென்றும் சுலபத்தில் நினைத்து விட முடியாது.

மசோதாவின் கர்த்தாவே மெஜாரட்டி கிடைத்து விடுமென்பதற்கு ஆதாரமில்லையென்று சங்கராச்சாரியாருக்கு எழுதியிருக்கிறார். குருவாயூரில் மெஜாரட்டி ஓட்டுகிடைத்ததாகச்சொல்லப்பட்டாலும், அதுமகாத்மாவின் உயிரைப் பலியிடப் போவதாய் பயப்படுத்தியதின் மீது கிடைத்த ஓட்டுகளாகும்.

தீண்டாமையை ஒரு குற்றமான காரியமென்று மசோதா சொல்வதில்லை. அதுவும் ஒரு சாதாரண செடுதியைப் போலவே பாவிக்கப் படுகிறது.

தீண்டாமையைப் பாவிப்பது சட்ட விரோதமாக பாவிக்கவேண்டுமென்று மசோதா சொல்லவில்லை மெஜாரட்டியார் சம்மதமில்லாவிட்டால் ஆலயப் பிரவேசத்திற்கு என்றென்றைக்குமே அனுமதி கிடையாதென்பதை இம்மசோதா உறுதிப்படுத்துகிறது.

தீண்டாமை பாவிப்பது ஒரு குற்றமான காரியம் என்று சட்டம் செய்வதாயிருந்தாலொழிய தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த மசோதாவை ஆதரிக்க முடியாது.

இந்த மசோதாவால் மகாத்மா எப்படி திருப்தியடைந்தார் என்பது எனக்கே விளங்கவில்லை.

இது தாழ்த்தப் பட்டவர்களுக்கு கண்டிப்பாய் திருப்தி தரத்தக்கதல்லயாதொரு பிரயோஜனமுமற்றவெறும் ஆலயப் பிரவேசத்தில் தங்கள் சக்தியையும் கவனத்தையும் செலுத்த தாழ்த்தப் பட்டோர்கள் விரும்பவில்லை.

அன்றியும் இன்றைய ஆலயப் பிரவேச மென்பது தாழ்த்தப்பட்டவர்களின் சுயமரியாதைக்கு விரோதமானது.

எப்படியெனில் முன்னர் ஐரோப்பியர்களின் வீடுகளின் முன்புறம் "நாய்களும் இந்தியர்களும் பிரவேசிக்கக் கூடாது" என்று ஒரு போர்டு எழுதி தொங்கவிடப் பட்டிருக்கும். அதைப் பார்த்த ஒரு இந்தியனாவது தன்னை அந்த ஐரோப்பியனின் வீட்டிற்குள் செல்ல அனுமதி கொடுக்க வேண்டுமென்று கெஞ்சியதே கிடையாது. அது போலவே இந்து கோவில்களிலும் "தீண்டாதார்கள் தவிர எல்லா இந்துக்களும் நாய்கள் உள்பட எல்லா மிருகங்களும் ஆலயங்களுக்குள் பிரவேசிக்கலாம்" என்கின்ற போர்டு எழுதித்தொங்க விட்டிருப்பதுபோல் இருக்கிறது.

இதை யறிந்த சுயமரியாதையுள்ள எந்த தீண்டாதாராவது இம்மாதிரி இழிவுபடுத்தப்பட்ட இடத்துக்குள் பிரவேசிக்க ஆணவம் கொண்ட இந்துக்களிடம் கெஞ்ச முடியுமா என்பதை யோசித்தால் அதிலுள்ள இழிவு விளங்கிவிடும்.

தாழ்த்தப்பட்டோர்களுக்கு கோவில் பிரவேசமளிப்பதே ஒரு பிரமாதமான காரியமென்றும், அதுவே தான் அவர்களுடைய முற்போக்கிற்காக செய்யவேண்டிய முடிவான காரியமென்றும் இந்துக்கள் கருதியிருப்பார்களானால் தாழ்த்தப்பட்டவர்கள் இதோடு திருப்தியடைந்துவிட முடியாது.

இந்து சமூகம் தங்களை (தீண்டாதார்களை) சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டதென்று கருதி வேறு புகலிடம் (மதம்) தேடிக்கொள்வார்கள். அப்படிக்கில்லாமல் கோவில் பிரவேசமென்பது முதற்படியென்றும், இன்னும் மற்ற எல்லாவித முற்போக்கிற்கும் உதவி செய்யக்கூடுமென்றும் மகாத்மா உள்பட எல்லோர்களும் கருதுவார்களேயானால் அதைத்தாழ்த்தப்பட்டவர்கள் ஆதரிக்கக்கூடும்.

தாழ்த்தப்பட்டவர்களின் லட்சியமெல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள்சமூகவாழ்வில் சமத்துவமளிக்கும் ஒரு மதத்தில் சேரவே அவர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சமூகத்தில், அச்சமூக மக்களில் சிலருக்கு கேடு விளைவிக்கக் கூடியகாரியம் இன்னதென்று நன்றாய் விளங்கிய பின்னரும் மத சாக்கைக்காரணமாகக்கொண்டு அக்கேட்டை ஒழிக்க முடியாதென்று சொல்லுவது மிகமிக இழிவான காரியமாகும். இவ்வித கொடுமைகளை ஆதரிக்கும் ஒரு மதத்தை இனி மேல் சார்ந்திருப்பதில்லை என்று தாழ்த்தப்பட்டவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டார்கள். இந்து மதத்தை தங்கள் மதமென்று தாழ்த்தப்பட்டவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமாயின் இந்து மதத்தில் சமதர்மம் ஏற்படவேண்டுமென்றுதான் அவர்கள் விரும்புகின்றார்கள். ஆலயப்பிரவேசம ஏற்பட்டு விட்டதனாலேயே அம்மதத்தில் சமதர்மம் ஏற்பட்டுவிடுமென்று சொல்ல முடியாது. சாதிப் பிரிவுகளும், வருணாசிரம பிரிவுகளும் ஒழிக்கப்பட்டாகவேண்டும். அவைதான் எல்லாவித உயர்வு தாழ்வுகளுக்கும், சாதிமுறைகளுக்கும் பிறப்பிடமாகவிருக்கின்றது. ஆகவே இந்த சாதி முறையும் வருணாச்சிரம தர்மமும் ஒழிக்கப்பட்டாலொழிய தாழ்த்தப்பட்டவர்கள் கோவில் பிரவேசத்தை தள்ளிவிடுவதோடு இந்து மத நம்பிக்கையையும ஒழித்து விடவேண்டியவர்களாவார்கள்.

ஒரு சமயம் தற்கால சாந்தியாக கோவில் பிரவேசத்தை ஒபபுக்கொள்ளுவதானது பின்னாலே வருணாச்சிரம தர்மத்தையும, சாதி முறையையும் ஒழிப்பதற்கு வேலை செய்வதைத்தடுத்துவிடாதென்று ஒரு சமாதானம் சொல்லவரலாம். அது எப்படியிருந்த போதிலும் தோழர் காந்தி வருணாச்சிரமத்தையும், ஜாதிப் பிரிவையும ஒழிப்பதை ஒபபுக்கொள்ளுகிறாரா என்பதையும், வருணாசிரமத்தை ஒழிக்க நான் முயற்சி செய்தால் அப்பொழுது காந்தி என்னோடு சேர்வாரா? என்பதையும் நன்றாய் தெரிந்த பிறகுதான் நான் கோவில பிரவேச மசோதாவை ஆதரிப்பதாகவோ, மறறும் தோழர் காந்தியோடு சேர்ந்து வேலை செய்வதாகவோ சொல்லமுடியும். ஆகையால் தோழர் காந்தி வருணாசிரமத்திற்கு அனுகூலமாகவிருப்பாரேயானால்வருணாசிரமதர்ம விஷயத்தில் தோழர்காநதி வர்ணாசிரமிகளோடு சேர்வாரேயானால்இப்பொழுதிருந்தே நான் அவரோடு இருக்கவோ ஒத்துழைக்கவோ முடியாது."

---

## காந்தியின் வருணாச்சிரமத்தைப்பற்றி "தமிழ் நாடு" எழுதுவது.

"தேசிய வாலிபர்கள் கல்யாணமே செய்துகொள்ளக்கூடாது, விவாகமான தம்பதிகளும் சகோதரத்துவத்துடன் வாழவேண்டுமென்று ஆதியில் சொன்ன மகாத்மா, அவருடையஆசிரமத்திலேயே கல்யாணங்கள் நடத்தி வருவதையும், சட்டசபைப் பக்கம் தலை வைத்தும் படுக்கக்கூடாதென்ற மகாதமா, சட்டசபைகளை ஆதரித்துவருவது இன்று வரையில் அவருடைய மாறுபாடுகளையும் யாவரும் அறிந்துமிருக்கின்றார்கள்"

"பிராமண-பிராமணரல்லாத பச்சைக்குழந்தைகள் ஒன்றாக கலந்துண்ணலாமா கூடாதாவென்று தோன்றிய தமிழ்க்குரு குலப் போராட்டத்தை தீர்த்து வைக்க முடியாமல் மகாத்மா தவறியதிலிருந்து நாமும் மற்றுஞ்சில பிராமணரல்லா தேசியவாதிகளும் காங்கிரசிலிருந்து விலகும்படி நேர்ந்தது."

"காங்கிரஸ் இயக்கத்தின் வேகம் குன்றியவுடனே சிறையிலிருந்துகொண்டே தீண்டாமையை விலக்க காந்தி போர் தொடுத்திருப்பதை நாமும் மனப்பூர்வமாக ஆதரித்து வருகிறோமெனினும், அவருடைய சிஷ்யர்களை நன்கறிந்தவர்கள் அவருடைய தீண்டாமை விலக்கு பிரசாரத்தில் ஈடுபடாமல் விலகியிருக்கிறார்கள்."

"மகாத்மாவின் சமயசமூக கொள்கைகளில் நமக்குப் பெருத்த சந்தேகங்கள் இருந்து வருகின்றன.. பிராமணர்கள் தவிர மற்றெல்லா வகுப்பினர்களையும் தாழ்த்தி இழிவுபடுத்தும் வர்ணாச்சிரம ஜாதிவேற்றுமைகளை மகாத்மா காந்தி இன்னும் ஆதரித்து வருவதை பலமாகக் கண்டித்து பிராமணரல்லாத சமூகத்தினரை எச்சரிக்க வேண்டியது நமது கடமையாகும்."

"ஹரிஜனம்" என்ற ஒரு புதிய பத்திரிகைக்கு டாக்டர் அம்பேத்கார் அனுப்பியுள்ள வாழ்த்துசெய்தியில் தீண்டாமை ஒழிவதற்கு ஜாதி வேற்றுமைகள் தொலையவேண்டியது அவசியமென்று டாக்டர் அம்பேத்கார் எடுத்துக்காட்டியிருக்கிறார். அதை மறுத்து மகாத்மா காந்தி ஜாதி வேற்றுமைகளால் தீங்கில்லையென்றும், தீண்டாமைக்கும், ஜாதிவேற்றுமைகளுக்கும் சம்பந்தமில்லையென்றும், ஆகையால் தீண்டாமையை விலக்குவதற்கு வர்ணாச்சிரமம் நீங்கவேண்டியதில்லையென்றும் மகாத்மா கூறுகிறார்."

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

## மதத்துவேஷத்தின் வித்துக்கள்.

(தோழர். பெட்ரண்ட் ரஸ்ஸல் M. A., F. R. S.)

(முன் தொடர்ச்சி)

### ஒரு மதநம்பிக்கையே பிறமதத்துவேஷத்தின் வித்து.

கிறிஸ்து மதம் தலையெடுத்த அன்றுதான் உலகிலே மதத்துவேஷம் என்பது உற்பவித்தது எனலாம். இதை சரித்திர ஆராய்ச்சியாளர் ஒவ்வொருவரும் நன்கு கவனித்தல் வேண்டும். கிறிஸ்து மதத்தில் இவ்வித மதத்துவேஷ புத்தி தழைத்தோங்க மூலகாரணமாக இருந்தவை எவையெனில் ஞானமார்க்கம், கடவுள் வழிபாடு எனப்படும் இந்த இரண்டும் யூதர்கள் (Jews) கொண்டிருந்த மூடநம்பிக்கையே என்பேன். ஆதியில் யூதர்கள் இவ்வித துவேஷக்கொள்கையை ஏன் ஆதரித்துக்கையாடினார்கள் என்பது எனக்கே இன்னும் நன்றாக விளங்கவில்லை. இந்த மதத்துவேஷ புத்தி அவர்களிடம் குடிகொண்டதற்குக் காரணம், அவர்களை பிறதேச மக்கள் நாற்புறமும் சூழ்ந்து அடக்கி யொடுக்கி அடிமை கொள்ள முற்பட்டதாலேற்பட்ட சுபாவ துவேஷகுணம் என்பதாக யூகிக்கலாம். காரணம் யாதாயிருப்பினும் சரியே, யூதர்களும் முக்கியமாக தீர்க்கதரிசிகள் (Prophets) எனக்கருதப்பட்டவர்களும் தான், இப்போது காணப்படும்மிக்க மௌடீகமான ஞானமார்க்க விதிகள் எனப்படுவன வற்றையும், தங்கள் மதத்தைத்தவிர மற்ற மதங்களை அறவே யழிக்க வேண்டுமென்றதுவேஷபுத்தி யையும் முதன் முதலில் புதிதாகக்கற்பனை செய்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. மேற்கூறிய இந்த இரண்டு கொள்கைகளினால் மேநாடுகளிலே விளைந்த தீமைகளுக்கு அளவே இல்லை யென்பது சரித்திரப்பிரசித்தம். கான்ஸ்டான்டைன் (Constantine) காலத்திற்கு முன்னர் ரோமாபுரியை பரிபாலித்து வந்த சக்கரவர்த்திகளால், ஏதோ கிறிஸ்துவர்கள் பலர் கொலை செய்யப்பட்ட விஷயத்தைப்பற்றி இப்போதுள்ள கிறிஸ்துவ திருச்சபை (Churches)கள் பிரமாதப்படுத்தி வருகின்றன. ஆனால் அவ்வித கொலைகள் மிகச்சொற்பமானதும் பல இடங்களிலே பலகாலங்களில், முக்கியமாக இராஜீய சம்பந்தமாகவே (Political) நடைபெற்றதெனலாம். அவ்வித கொலைகள் ஒரு புறம் அவ்வாறிருக்கட்டும். ஆனால், கான்ஸ்டான்டைன் காலத்திற்குப்பிறகு, கிறிஸ்துவர்களுக்குள்ளேயே ஒரு பிரிவினருக்கும் மற்றொரு பிரிவினருக்குமே நடந்த பல மிகக்கொடூரமான கொலைகளுக்கும் (Persecution) காரணம் ரோமாபுரி சக்ரவர்த்திகள்தானா? கிறிஸ்துவர்களுக்குள் கிறிஸ்துவர்களே செய்துகொண்ட இத்தகைய கொலைகளைப் போல் (persecution) எந்த ரோமபுரிச்சக்கரவர்த்தியாலும் நடைபெறவே இல்லை. யூதர்களிருந்த இடத்தைத் தவிர, மற்றபடி உலகத்திலுள்ள எத்தேசத்திலும் இம்மாதிரியான கொலைகள் கிறிஸ்துமதம் தோன்றுவதற்கு முன் நடைபெற்றதே இல்லை. இதனால் மனிதனை மனிதன் வெறுப்பதோடு கொலை செய்யவும் தூண்டுவதற்கு ஒத்தாசையாக இருந்ததும், இருப்பதும் ஆனவற்றுள் மதம் என்பதும் ஒன்று என்பது தெளிவாகின்றதல்லவா.

ஹெரோடாடஸ் (Herodotus) என்பாருடைய நூல்களைப் பார்ப்போமானால், அவர் சென்று நேரில் பார்த்த போது மற்றதேசத்தினர் அக்காலத்திலே எவ்வளவு பொறுமையுடனும் சாந்தமாகவும் நடந்து வந்தனர் என்பது விளங்கும். ஆனால் அவர்கள் காட்டியகாட்டுமிராண்டித்தனமான சிலபழக்க வழக்கங்கள் அவரைத் திடுக்கிடச் செய்தனவெனினும், அவர் (ஹெரோடாடஸ்) மற்ற கடவுளர்களிடத்திலும், பிறநாட்டாருடைய ஒழுக்க வழக்கங்களிடத்திலும், எத்தகைய பாரபக்ஷமில்லாத மனப்பான்மையையுடையவராக இருந்தாரென்பது நன்கு விளங்கும்.

யேசுநாதரை (zeus), வேறொரு கூட்டத்தார் இன்னொரு பெயரால் அழைப்பாரென், அவர்கள் என்றென்றும் மீளாத பாழ்நரகில் வீழ்வார்கள் என்ற கொள்கையை அவர்கள் நிரூபிக்க எந்த இடத்திலும் பிரியப்படவுமில்லை, அதற்காக அவர்களை உடனே கொன்று அவ்வித நரக துன்பத்தை எவ்வளவு சீக்கிரம் அனுபவிக்கச் செய்யவேண்டுமோ, அதற்கான காரியங்கள் அனைத்தும் செய்யவேண்டுமென அவர் கூறத்துணியவுமில்லை. ஆனால் இவ்வித மனப்பான்மைக்கு முற்றும் மூலகாரணமாக இருந்தவர்கள் யார்? கிறிஸ்துவர்களே என்பேன்.

அப்படியானால் தற்கால கிறிஸ்துவர்கள்மிக்க பொறுமையுடனே இருக்கின்றார்களே என்பீர்கள், அவர்கள்சிறந்த குணமுடையவர்களாக இருப்பது உண்மையாக இருப்பினும், அவ்வித சாந்தகுணம் அவர்களிடத்திலே மிளிரக்காரணம்கிருஸ்துமதமும் அன்றே அன்று என்? மேனாட்டுக்கிளர்ச்சிகால (Renaissance) முதல் இந்த நாள்வரை சுய அறிவாளி (Free thinkers) களுடையம்தாகை அதிகரித்து மேலோங்கி வருவதனாலும், அவர்கள் காட்டிய அறிவு விளக்கத்தால் கிருஸ்துவர்கள் தங்கள் இழி குணத்தையும் மூடப் பழக்க வழக்கங்களையும் நன் குணர்வார்களாகி வெட்கிச் சீர்திருத்தத்திற்காக எத்தனையோ கிளர்ச்சிகள் செய்து வந்ததன் பயனாலுமே யாகும். விஷயம் இவ்வாறிருக்க, இப்போது கிருஸ்துவர்கள் நம் முன்வந்து; நாங்கள் எவ்வளவு தயாதாக்ஷண்யமும், அன்பும் பொறுமையும் உடையவர்களாக இருக்கிறோம் பாருங்கள்—என்று கூறுவது மிக்க விந்தையாகவே இருக்கிறது! அவர்களுடைய சாந்தத்திற்கும் அறிவு விளக்கத்திற்கும் காரணமாக இருந்தவர்கள் ஆதியில் அவர்களால் (கிறிஸ்துவர்களால்) கொலை செய்யப்பட்ட கூட்டத்தைச் சேர்ந்த பிற மதஸ்தர்களின் உபதேச மொழிகளே என்பதை இவர்கள் உணர்கின்றார்களில்லை.

### மதத்திலே மூடநம்பிக்கை.

கி. மு. 4004வது வருஷத்தில் தான் இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டதென்பதாகக் கிறிஸ்துமதம் பறைசாற்றுகின்றது. இப்போது நம்புகின்றவர் யார்? ஒருவருமில்லை. ஆனால் கிறிஸ்துமதம் ஏகாதிபத்யம் செலுத்திவந்த அந்நாளிலே எவனாவது ஒருவன் இதற்கு மாறாக எண்ணத் தலைப்படுவானெனின் அவனது தலை அப்போதே எடுபடும் என்பதில் சந்தேகமே இல்லை! உண்மையை விளக்க ஓர்சிறிய அனுபவார்த்தமான உதாரணத்தை எடுத்துரைக்கின்றேன். என்னுடைய பாட்டனுக்குப் பாட்டனாகிய (Great Great Grand Father) ஒருவர், எட்னா (Etna) எனும்எரிமலைதனின்றும் எரிந்தெழுந்த உலோகங்களையும் பரிசீலனை செய்து, மதப்பித்தர்கள் கூறுவதுபோல் உலகம் கி. மு. 4004ம் வருஷத்தில் சிருஷ்டிக்கப்படவில்லை; இன்னும்பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டும் என்ற முடிவுகண்டு, அதனை ஒரு சிறிய நூல் வாயிலாக வெளியிட்டார். இந்தக் குற்றத்திற்காக உடனே அவர் தன் ஊரைவிட்டு தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார்! அவர் சர்வ சாதாரண மனிதராக மட்டும் இருந்திருப்பின், அவருக்கு அளிக்கப் பட்ட தண்டனை அம்மட்டோடு நின்றிராது, (அதாவது அவரது தலை தப்பியிராது) என்பதில் சந்தேகமே இல்லை. என்ன கொடுமை!!

### மதத்திலேயே கிளர்ச்சிகள்.

ஆனால் சுமார் 150வருடங்களுக்கு முன் நம்பிவந்த விஷயங்களை இப்போது மதஸ்தர்கள் நம்புகின்றார்களா? இல்லையே யெனலாம். அவ்வாறு அவர்கள் இப்போது அறிவு விளக்கம் பெற்றிருப்பின் அது மதத்தின் பயனாவது எங்ஙனம்? கிறிஸ்து மதத்திலுள்ள ஆபாசக் கொள்கைகள் ஒவ்வொன்றும் மிகப்பலமான எதிர்ப்புகளாலும், கிளர்ச்சிகளாலுமே புரட்சி செய்யப்பட்டு இந்நிலைமைக்குக் கொண்டு வரப்பட்டதே யொழிய வேறு விதங்களால் அன்று. அவ்வித சீர்திருத்தங்கள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மதப்பித்தர்கள் முட்டுக் கட்டையாக இருந்து முறண்பட்டே வந்திருக்கின்றனர். கொஞ்சம் கொஞ்சமாகவே சுயமதிப்பாளர்கள், (Free thinkers) மதப் பாதுகாப்பாளர்களை முறியடித்து வெற்றி பெற்றனர். ஆதலின் மனிதர்க்கு மனிதர் துவேஷ புத்தியுடையவர்களாக செய்து வருவது மதமே என்பதும்; மதக்கிளர்ச்சி என்பது மதம் தோன்றிய முதற்கொண்டே இருந்து வந்திருக்கின்றதென்பதும்; மதம் அழிந்தாலொழிய சமூக ஒற்றுமை யோங்கி மதக்கிளர்ச்சிகள் தாழும் என்பது இயலாதென்பதும் நன்கு விளங்குகின்றதன்றோ? மேலும் மதம் என்றொன்று இருக்கும் வரையில், அதற்குச் சார்பாகச் சிலரும், எதிர்ப்படையாகச் சிலருமே எக்காலத்தும் இருந்தே வருவார்கள். ஆதலின் இப்போது மதம் எந்நிலைமையிலிருக்கின்றதென்பதிலிருந்து, மதக்கிளர்ச்சியின் பயனை அறிவுள்ளோர் நன்குணர்ந்து தெளிவதோடு, மதத்துவேஷத்தை விடுத்து, அத்தகைய துவேஷ புத்திக்கு ஆதாரமாகஇருந்த-இருக்கின்ற-மதத்தையே ஒழிக்கக கிளர்ச்சி செய்வாராக.

---

## சேலம்

### சுயமரியாதைச்சங்கம்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச்சங்கத்தில் ஷை சங்கப்பார்க்கில் 12-2-33-உ ஞாயிற்றுக்கிழமை சுயமரியாதைப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் ஆர். ஆறுமுகம் அவர்கள் தலைமையின்கீழ் "மகாமகம்" என்னும் விஷயத்தைப்பற்றி சுயமரியாதைத் தோழர்களான, ஜலகண்டா புரம், எல். ராமநாதன், ஏ. சித்தையா, ஆர். நடேசன் ஆகியவர்கள் மிகவும் உறுக்கமாகவும், விரிவாகவும், விழக்கமாகவும் சொற்பொழிவாற்றினார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் 6-30 மணிக்குக் கலைந்தது.

என ஒரு நிருபர் எழுதுகிறார்

# மாமாங்கம் மூடப்பழக்கம்,
# பார்ப்பனப்புரட்டு,
# காசுபறிக்கும் தந்திரம்,
# தொத்து நோய் வரும்.

# வேண்டாம்!
# வேண்டாம்!
# மாமாங்கத்திற்கு
# போகவேண்டாம்!!

# சுயமரியாதை நிர்வாக திட்டம்.

## (Constructive Policy of S. R. Party)

### சோவியத் திட்டத்தின் சிறப்பு.

[M. S]

உலகத்தில் பண்டைக்காலமுதல் நிகழ்ந்துவந்து, தற்போது நிகழ்கின்ற அரசுகளெல்லாம் மூன்று நான்கு வகுப்புக்களாகப்பிரிக்கலாம். வேத காலத்தில் நமது இந்தியதேசத்தில் அரசாண்டு வந்த மன்னர்கள் பெரும்பான்மையோரும் சர்வாதிகாரிகளாக (Dictators) இருந்ததாக பூர்வ இந்திய சரித்திரங்களால் தெரிய வருகிறது. இதே சர்வாதிகார அரசு இந்திய நாகரீகத்துக்கு முந்தியும், பிந்தியும், கால்டியா (Chaldea) அஸீரியா (Assyria) ஈஜிப்ட் (Egypt) முதலிய பண்டைக்கால அரசுகளிலும் பூர்வ ஐரோப்பாதேசத்திலும் நடந்து வந்ததாக பூர்வகால உலக சரித்திரங்களில் படிக்கலாம். இவ்வித ஏகாதிபத்திய ஆட்சிகள் ஒரு காலத்தில் உலக முழுமையுமே நிகழ்ந்திருந்ததாகச் சொல்லலாம். இவ்வித ஏகாதிபத்திய ஆட்சி (Autocracy) உலக அரசுகளில் முதல் வகுப்பாக வைத்துக்கொள்ளலாம் ஆனால் இந்த சர்வாதிகார ஆட்சிகள் நடந்தேறி வரும்பொழுதே இந்த ஆட்சியால் கஷ்டப்பட்டுவந்த அக்கால பிரபுக்களின் புரட்சியால் சிற்சில ஏகாதிபத்திய அரசுகள் மாறி அங்கும் இங்கும் சில குடி அரசுகள் (Republics) ஸ்தாபிக்கப்பட்டு வந்தன. இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்னிருந்த புத்தர் காலத்திலும் அந்தக்காலத்திய பிரபுக்களால் நமது இந்திய தேசத்தில் சிற்சில குடி அரசுகள் ஸ்தாபிக்கப்பட்டு வந்திருக்கின்றன. அதேமாதிரியாகவே கடந்த இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முந்தியிருந்த கிரீஸ் தேசத்திலும இவ்விதமான குடி அரசுகள் இருந்துவந்தன. ஆனால் ஏகாதிபத்திய ஆட்சிக்கும இந்தக்குடி அரசு ஆட்சிக்கும் சொல் மாத்திரத்தில் வித்தியாசமேயொழிய நிர்வாகத்தில் யாதொரு வித்தியாசமுமில்லை ஏகாதிபத்தியத்தில் (Empire) சர்வாதிகாரி ஒருவனே சகல அரசியல் நிர்வாகங்களிலும தானே கர்த்தாவாக இருந்து நடத்தி வந்தான. ஆனால் ஆதிகால குடி அரசு நிர்வாகம்மா (Oligarchy) (ஒலிகார்க்கி) என்று வழங்கிவரும் அதாவது ஒரு சர்வாதிகாரிக்கு பதிலாக ஏழெட்டுப் பேர் சர்வாதிகாரிகளாக நடத்திவரப்பட்டது. இந்த வித்தியாசத்தைத் தவிர பண்டைக்கால ஏகாதிபத்தியத்திற்கும, பண்டைக்கால குடிஅரசிற்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. உலக மக்களில் நூறறுக்கு தொண்ணூற்றெட்டுப்பேர்களாகிய உழுகின்றவன், தச்சன், கருமான், குயவன், கொத்துக்காரன (Builder) நெசவாளி, மீன்பிடிக்கின்றவன், தோணியோட்டுகின்றவன், சிறுவர்த்தகன், வைத்தியன் முதலியவர்களுக்கெல்லாம் எவ்விதசெல்வாக்குமில்லை.

இரண்டாவது அரசியல் என்னவெனில் கட்டுப்பட்ட ராஜாதிபத்தியம் Limited Monarchy) என்று சொல்லலாம். இந்த ஆட்சியிலும் ஏகாதிபத்திய அரசனைச் சுற்றியிருந்த பிரபுக்கள் புரட்சி செய்து ஜனங்களுடைய உரிமைக்காக (Peoples Right) சிற்சில சுதந்திரங்களை தங்களுக்கே பெற்றுக்கொண்டனர். அரசனுக்கோவெனில், தனது சுய ஆட்சியைவிட்டு அந்த பிரபுக்களின் யோசனையைக் கேட்டு நடப்பதற்கு நேரிட்டது. இந்த ஆட்சி மத்திய காலத்திலும் இன்றைக்கும் ஸ்தாபிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இவ்வித கட்டுப்பட்ட ராஜாதிபத்தியத்தில் (Limited Monarchy) நமது ஆங்கில ஆட்சி ஒன்று. ஆனால் பண்டைக்காலத்து (Limited Monarchy) க்கும் தற்கால (Limited Monarchy) க்கும் ஒரு வித்தியாசம் நாளடைவில் உண்டாயிற்று. அதாவது பண்டைக்கால (Limited Monarchy) யில் அரசியல் ஆதிக்கத்தை அரசனும் பிரபுக்களும் பங்கிட்டுக்கொண்டு அரசியலை நடத்திவந்தனர். தற்கால (Limited Monarchy) யிலோ ஓர் மூன்றாவது பேர்வழி அரசியல் ஆதிக்கத்தை பங்கிட்டுக்கொள்ள ஆரம்பித்தனர். இவர்களுக்குத்தான் ஜனங்களின்கட்சி அதாவது பிரதிநிதிகள் (Peoples' Party or Representatives) என்று வழங்கப்படுகிறது. இவர்கள்தான் அமெரிக்கக்குடி அரசு நாட்டிலும், பிரஞ்சுக்குடி அரசு நாட்டிலும் மற்றும்பல குடி அரசுகளிலும் அரசியல் ஆதிக்கத்தை பங்கிட்டுக்கொண்டு அதன் நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். இந்த சாதியார் யாரெனில் சென்ற இருநூறு, முந்நூறு வருஷத்திற்குள் உண்டான முதலாளி என்பவர் நில உரிமையாலும், வீடுகளின் உரிமையாலும், வர்த்தக உரிமையாலும், தொழிற்சாலை, கப்பல், ராணுவம் மற்றும பலவித உரிமைகளாலும் வந்த சாதியார். இந்த ஆட்சியிலும் சாமானிய மக்களுக்கு யாதொரு அக்கும்பாத்யதையும் கிடையாது.

மூன்றாவது தற்கால குடிஅரசு என்று வழங்கும் அரசியல் திட்டமாகும். இந்தக் குடிஅரசு திட்டத்தில் ஜனநாயக (Democracy) ஆட்சி என்றதோர் கற்பனைச்சித்தாந்தத்தைப் புகுத்தியுள்ளார். ஜனநாயக ஆட்சியின் கருத்தென்னவெனில் ஜனங்களால், ஜனங்களுக்காக, ஜனங்கள் நன்மைக்காக நடத்தப்படும் ஆட்சியென்று சொல்லுகிறார்கள். இந்த சொல்லைக்கொண்டு எந்தவிதக்குடி அரசிலும் ஜனங்களை ஏமாற்றி வந்ததாகவே தெரிகிறது. இதனைச்சற்று விபரமாகவே விளக்கிக்காட்டுவோம். குடிஅரசுகள் நடைபெறும் ஆட்சி (Government) களிலெல்லாம் யார் அந்த ஆட்சியினை நடைமுறையில் நடத்துகின்றார்களென்று பார்ப்போம். முதலாவது தலைமையில் ஓர் பிரசிடெண்ட் இருக்கின்றார். அவருக்குமாதம் ஒன்றுக்கு ரூபாய் 5000, முதல் 12000வரை சம்பளம்உண்டு. இரண்டாவது பிரதிநிதிக்கூட்டமென்று வழங்கும் ஓர் கூட்டமாகும். மூன்றாவது நிர்வாகக்கூட்ட (Executive) மென்று ஒன்று உண்டு. டிமாக்கிரிசி என்று வழங்கும் திட்டத்தில் இம்மூன்று வகுப்பாரே அரசியல் முறையை நடத்தி வருகிறார்கள். இம்மூன்று வகுப்பார் யாரெனில் முதலாளிகளின் முதலாளியாகிய பிரசிடெண்டும், இவனைப்போன்ற முதலாளிகளாகிய லாயர், வியாபாரி, நிலச்சுவான், குருமார், ராணுவத்தலைவன், முதலியவர்களுமே. மூன்றாவதாகிய நிர்வாக சபையிலுள்ள அங்கத்தினர்கள் யாரெனில் இவர்களில் பொறுக்கியெடுத்த ஏழெட்டு அல்லது பத்துப் பனிரண்டு நிர்வாக உத்தியோகஸ்தர்களை (Executive members) உலகில் நிறைந்துள்ள குடி அரசுகளெல்லாம் இம்மூன்று திறத்தாரே சகல அரசியல் சம்பதத்தையும் ஆதிக்கத்தையும் பெற்றுளர். இந்த மாபெரும் சொல்லாகிய ஜனநாயக ஆட்சியில் (Democracy) காணும் காட்சி இதுவே. இவர்கள் 100-ல் 2-பங்கு அரசியலில் நேராக நிர்வாகமில்லாதவர் 100-க்கு 98பேர்

ஆனால் இதற்கு ஒரு ஆட்சேபணை உண்டென்று சொல்வார்கள். அது யாதெனில் ஜனநாயகத்தில் இந்த நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேருக்கு அதாவது குயவன், வண்ணான், சக்கிலி, தோட்டி, அம்பட்டன், கருமான், தச்சன் உழவன், முதலியோருக்கு அரசியலை யார் நடத்துவதென்று நியமிக்க வாக்குரிமை உண்டு என்று வாதிப்பார்கள். ஆனால இது சொல்மயக்கே ஒழிய சரியான வாதமாகாது. 100-க்கு 98-பேருக்கு அரசியலை நடத்த வாக்குரிமையுளதாகவே வைத்துக்கொள்வோம். ஆனால்இந்தஓட்டுகளால் நடைமுறையில் யார் பிரதிநிதிகளாக நியமிக்கப் படுகின்றார்களென்பதைச் சற்று நோக்கிப்பார்க்க வேண்டும். அந்த லாயர்களே, அந்த நிலச்சுவான்களே, அந்த முதலாளிகளே பிரதிநிதிகளாக அனுப்பப்படுகின்றார்களே யொழிய வண்ணான் தொழிலுக்கு வண்ணானும், மற்றுமுள்ள பலவாயிரம் தொழிலுக்குரிய தொழிலாளியும், விவசாயியும் அரசியல் பிரதிநிதியாகச் செல்வதில்லை. நிலமில்லாதவனுக்கு நிலச்சுவானும், ரயில், கப்பல், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை ஒன்றும் தெரியாத லாயரும், வர்த்தகனும் பிரதிநிதியாக வருவதென்றால் இந்தத்திட்டம் என்ன யோக்கியதையுடையதென்று நாங்கள் கேட்கின்றோம். இதனை ஜனநாயகமென்று அழைப்பது மோசமாகாதா? அந்தத் தொழிலைப்புரியும் தொழிலாளிக்கும் நிலத்தை உழுது பயிரிடும் விவசாயிக்கும் அவரவர் தொழிலில் ஈடுபட்டு உழைத்து வரும் தொழிலாளியும் விவசாயியும் உண்மையான பிரதிநிதியானாலேயொழிய, இதைத்தான் சரியான ஜன நாயகமென்று சொல்லலாமேயொழிய, மற்ற எந்த பிரதிநிதித்திட்டமும் டிமாக்கிரஸி என்ற பதத்திற்குப் பாத்திரமாகாது. மற்ற எந்தப் பிரதிநிதித் திட்டங்களும் (A vain hope, delusion & a mockery)), வீண் கோரிக்கை யென்றும், பித்தலாட்டமென்றும் கூற வேண்டும். இந்தப் பித்தலாட்டத் திட்டத்தால் தற்கால உலகம் படும் கஷ்டமெல்லாம் நேரிட்டு வருகின்றதெனவும் அறிக. இந்த டிமாக்கிரஸி என்ற வஞ்சனையால் உலகில் நடந்த, நடக்கின்ற, நடக்கப் போகின்ற புரட்சிகளெல்லாம் நேர்ந்து வருகின்றன. இந்த ஜன நாயக மோசடியைத் திரும்பத் திரும்பக் கையாளுவதால் யாருக்கு என்ன பயன்? ஆகவே இந்த ஜன நாயக (Democracy) பாசாங்கை விட்டு விட்டு தொழில் நாயக அரசியலை (Ergotocracy) யாக யாளுவது தான் உண்மைக்கு உத்தாரமாகும். நியாயத்துக்கும்பொதுவாகும். உலக விடுதலைக்கும் ஆதாரமாகும். அது என்னவென்று விளக்குவோம்.

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

# ஈ. வெ. ராவுக்கு
## சென்னிமலை யூனியன் போர்டார்
# வரவேற்பு.

9—2—33-ந்தேதி பகல் 2-மணிக்கு சென்னிமலை போர்டு ஸ்கூலில் தோழர் ஈ. வெ. ராமசாமி மேல்நாடு சுற்றுப்பிரயாணம் செய்து வந்ததை முன்னிட்டு அவ்வூர் யூனியன் போர்டாரால் ஒரு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தோழர் ஈ. வெ. ராமசாமியும், மற்றும் பலவியாபாரிகளும்ஈரோட்டிலிருந்துஅன்றுசரியாய் 2-மணிக்கு வந்து சேர்ந்தார்கள். தோழர் வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் பங்களாவிலிருந்து வாத்திய கோஷத்துடன் பள்ளிக்கூட மண்டபத்துக்கு அழைத்துச் சென்றதும், யூனியன் போர்ட் பிரசிடெண்ட் தோழர். வி. எஸ். முருகேச முதலியார் அவர்கள் உபசாரப்பத்திரம் வாசித்தார்கள். தோழர் ஈ. வெ. ராமசாமி உபசாரப்பத்திரத்தில் மூடப்பழக்க வழக்கங்கள் ஒழித்தல், பகுத்தறிவு வளர்ச்சி ஆகியவைகளுக்காக பாடுபட்டிருந்ததை புகழ்ந்து கூறியிருக்கும் விஷயங்களுக்குபதில் சொல்லும் முறையில், சுமார் ஒரு மணி நேரம் பேசினார். கூட்டத்திற்கு சுமார் 500 பேர்கள்வரை பிரபல வியாபாரிகளும், மிராசுதாரர்களுமாய் கூடியிருந்தார்கள். கூட்டமுடிவில் மாஜி யூனியன் பிரசிடெண்டும், தாலூகா போர்டு மெம்பருமான தோழர் சி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் வந்தனம் கூறினார். பிறகு தோழர் செங்கோட்டையா அவர்கள் பங்களாவில் ஒரு சிற்றுண்டி விருந்து நடந்தது.

### மாலையில் பொதுக்கூட்டம்.

மாலையில் 6-மணிக்கு சவுக்கில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்துச்கு சுமார் 1000பேருக்கு மேலாகவே வந்திருந்தார்கள். சென்னிமலை, ஈரோடு தாலூகாவில் ஒரு முக்கிய தேவஸ்தான மானதாலும் அன்று தைபூச உற்சவதேர்திருவிழா ஆனதினாலும், காவடி உற்சவமானதாலும் ஆயிரக்கணக்கான கிராமமக்கள் வந்திருந்தார்கள். ஈரோட்டிலிருந்து தோழர்கள். எம். சிக்கையா, எல். ராமசாமி, வி. எஸ், ஏ. கம்பெனி, எம். ராமசாமிமுதலியார், என்.பி.காளியப்பன், நாகைமணிஆகியவர்களும், ஈங்கூர் கந்தசாமி கவுண்டரும், பூந்துறை துரைசாமிக்கவுண்டரும், பெருந்துறை நாராயணசாமி பிள்ளையும், மற்றும் பிரபல மிராசுதாரர்களும் வியாபாரிகளும் வந்திருந்தார்கள. கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்படி பூந்துறை தோழர். துரைசாமிகவுண்டரவர்களை தோழர் வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் பிரரேபித்து தோழர் சி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் ஆமோதிக்க துரைசாமிகவுண்டர் தலைமை வகித்து தோழர் ராமசாமியை பேசும்படி கேட்டுக்கொண்டார்.

தோழர் ஈ. வெ. ராமசாமி உபன்யாசச் சுருக்கம்.

தோழர்களே! இன்று இவ்வூர் யூனியன் போர்டார் அழைப்புக்கு இணங்கி வந்த சமயம் உற்சவக் கூட்டத்திற்காக ஒரு பொதுக்கூட்டம் கூட்டவேண்டுமென்று சொன்னதால் இங்கு பேச ஒப்புக்கொண்டேன். ஆனால் இங்கு கூடியிருக்கும் நீங்கள் பெரிதும் இந்த உற்சவத்திற்காக வந்தவர்கள்.

நான் பேசும் விஷயம் உங்கள் மனத்திற்கு திருப்தியாய்இருக்காது. ஆனாலும் உங்கள் மனதை புண்படுத்த வேண்டும் என்று நான் பேச வரவில்லை. ஆனால் இதன் பயன் என்ன என்று யோசித்துப்பார்க்கும் படி கேட்டுக்கொள்ளவே நான் சில விஷயங்களைப்பேசுகிறேன்.

இன்றைய உற்சவமும், கொண்டாட்டமும் என்ன கருத்தைக்கொண்டது? சுப்பிரமணியசாமிக்கு கல்யாணம். கல்யாணம் செய்து கொண்டசாமி தேர்மீது ஊர்கோலம் வருகின்றார். இதற்காக இத்தனை ஆயிரம் ஜனங்கள் வீடுவாசல், வேலை வியாபாரம் முதலியவைகளை விட்டு விட்டு வந்து இன்று இங்கு கூட்டத்தில் நெருக்கப்படுகிறார்கள். பலர் காவடி தூக்கி ஆடுகிறார்கள். சாமிக்குக் கல்யாணம்என்பதில் ஏதாவது அறிவு இருக்கிறதா? வருஷந்தோறுமா கல்யாணம் செய்வது? இந்த காவடி தூக்கிக்கொண்டு கண்டபடி குதிப்பதிலும் உளருவதிலும் ஏதாவது அருத்தம் இருக்கிறதா? இதை அன்னிய மதக்காரனோ அன்னிய தேசத்தானோ பார்த்தால் என்ன சொல்லுவான்? வேறு மதக்காரன் இந்தபடி ஆடினால் நாம் என்ன சொல்லுவோம், நமது அறிவுக்கும் நாகரீகத்திற்கு இது தானா அடையாளம்? எத்தனை வருஷ காலமாக இந்தப்படி மூடக் கொள்கையில் ஈடுபட்டு வருகிறோம்? என்ன பலனைக் கண்டோம். மனிதனுக்கு முற்போக்கே கிடையாதா? 2000, 3000 வருஷத்திற்கு முந்திய நிலை நம்மிடம் சிறிதும் மாறவில்லை. இம்மாதிரி நடவடிக்கை நம்மை மிருக பிராயக்காரன் என்று காட்டுவதுடன் நமது பணம் எவ்வளவு செலவாகின்றது நமது நேரமும் ஊக்கமும் எவ்வளவு செலவாகின்றது பாருங்கள். கடவுளைப் பற்றிய எண்ணங்களும் பக்திகளும் நமக்கு என்ன பலனைக் கொடுக்கின்றன? அதிக பக்திக்காரன் தனக்கு வேண்டிய தெல்லாம் கடவுள் தருவார் என்று எண்ணுகின்றான். கடவுளைப் பற்றி அதிகமாய் அறிந்தவன் சகலமும் கடவுள்செயல் அவனன்றி ஓரணுவும் அசையாது என்றுஎண்ணுகிறான். மனிதனுடைய முற்போக்கையும் அவனது கஷ்டத்தையும் கொடுமையையும் நிவர்த்தி செய்து கொள்ளுவதையும் இந்த எண்ணங்கள் தடைப் படுத்துகின்றன.

பல ஆயிர வருஷங்களாக ஒருவன் கீழ் ஜாதியாய் இருப்பதற்கும் கல்வி அறிவு பெறாமல் இருப்பதற்கும் சதா உழைத்து உழைத்து பாடு பட்டும் பட்டினியாயும் போதிய ஆகாரமும் வசதியும் இல்லாமலும் இருப்பதற்கும் இந்த எண்ணங்களே காரணமாகும் இது போலவே பாடுபடாத சோம்பேரிகள் கோடீஸ்வரர்கள் ஆகவும் தலைமுறை தலைமுறையாய் பிரபுக்களாகவும் மேல் ஜாதிக்காரர்களாகவும் இருப்பதற்கும் இந்த எண்ணங்கள் தான் காரணம். இந்த எண்ணங்கள் பணக்காரனுக்கும் சோம்பேரிக்கும் (பார்ப்பானுக்கும்) தான் அனுகூலம் தொழிலாளிக்கும் கூலிக்காரனுக்கும், பண்ணைய ஆளுக்கும் கெடுதியே ஆகும்.

ஏழைகள் தங்கள் தரித்திரத்திற்கும் கஷ்டத்துக்கும் கடவுளும் தலைவிதியும் தான் காரணம் என்று சொல்லி விடுவாரே யாகில் அவர்கள் எப்படி தரித்திரத்தைநீக்கிக்கொள்ள முடியும்? அவன் தன்பாட்டின்பயனை எவன் அனுபவிக்கிறான்? ஏன் அனுபவிக்கிறான்? என்று பார்த்து அவை களை தடுக்கவேண்டும். இந்த காரியம் செய்ய ஒரு கடவுளும் ஒப்பாது. ஏனென்றால கடவுளையும் தலைவிதியையும் பணக்காரனும் சோம்பேரியும் தான்உண்டுபண்ணுகிறான். ஆகையால் அவைகளை தங்களுக்கு தகுந்த மாதிரியாகத் தான் உண்டு பண்ணிக் கொள்ளுவார்கள். இதில் உங்களுக்கு சந்தேகம் வேண்டாம. இங்கு மாத்திரம் அல்லாமல் எல்லா தேசங்களிலும் பணக்காரர்கள் தங்கள் நன்மைக்கும் அதுஸ்திரமாய்இருப்பதற்கும்இந்த மாதிரியாகத்தான் கடவுளை சிருஷ்டித்து அதைப் பிரசாரம் செய்யப் பாதிரிகளை ஏற்படுத்தி அவர்களுக்கு பணம் கொடுத்து காப்பாற்றி வருகிறார்கள். இந்தப் புரட்டுகளை உலகில் வெகு பேர் அறிந்திருந்தாலும் ரஷியா தேசத்தார்கள் தான் முதன் முதலில் இதை அழித்து நிர்த்தூளியாக்கிப் பணக்காரத்தன்மையையும் பாதிரித்தன்மையையும் ஒழித்தார்கள். ரஷியா தேசமானது இந்தியாவைப்போலவே பணக்காருடையவும், பாப்பனா (பாதிரி)களுடையவும் ஆதிக்கத்தில் இருந்து ஏழை பங்களை வாட்டி வதைத்து வந்தது. ஆனால் அவர்கள் அதற்குக்காரணம் கடவுள் புரட்டும், மதப்புரட்டும் என்பதை உணர்ந்து அந்த இரண்டையும் அழிக்கத்தொடங்கி இன்று எல்லோரும் சமமாய் வாழுகின்றார்கள். அங்கு சோம்பேரியோ, பிரபோ, பணக்காரனோ, முதலாளியோ மிராசுதாரனோ, ஜமீன்தாரனோகிடையாது. எல்லோரும் பாடுபடவேண்டியது. அதன் பயனை எல்லோரும் சமமாய் அனுபவிக்கவேண்டியது. ஒருவனை ஒருவன் எய்க்கவோ, ஒருவன் பாடுபட்டதை ஒருவன் அனுபவிக்கவோ முடியாது.

ஆனால் இன்று இங்கு "கடவுள் செயலால்" இருக்கும் தேசத்தில்ஒரு மனிதனுக்கு 1000 ஏக்கர் 10000 ஏக்கர் பூமி கூட இருக்கிறது. பூமிக்குச் சொந்தக்காரன் என்பவன் உழுவதில்லை, விதைப்பதில்லை, தண்ணீர் இறைப்பதில்லை, பாத்தி கட்டுவதில்லை, அறுப்பு அறுப்பதில்லை. ஆனால் விளைந்த வெள்ளாமையை எல்லாம் தன் வீட்டில் கொண்டு போய்க் கொட்டிக் கொள்ளுகிறான். உழுது, விதைத்து, தண்ணீர் பாய்ச்சி, அறுப்பு அறுத்த ஆளுக்கு ஒரு படி போராதா இரண்டு படி போராதா என்று அரை வயிற்றுக்குத் தான் கொடுக்கிறான். துணி வேண்டுமானால் தர்மத்துக்கு இனாம் கொடுப்பது போல் அரைத் துணி கொடுக்கிறான். வீடு வேண்டுமானால் காட்டில் கை அகலம் இடம் காட்டுகிறான். இதெல்லாம் பிச்சை கொடுப்பது போல் கொடுக்கிறான். ஆனால் மிராசுதாரனோ இவ்வளவையும் விற்று மாடி வீடு, மோட்டார் வண்டி, தேவடியாள், பிராந்தி, உஸ்கி, நாடகம், சினிமா, தாலூகா, ஜில்லா போர்டு, மெம்பர் பிரசிடெண்ட்டு முனிசிபல் சேர்மென் ஆகியவைகளுக்கு பதினாயிரக்கணக்காக வாரி செலவு செய்து ராஜ போகம் அனுபவிக்கிறான். இந்த அக்கிரமங்களுக்கு உடந்தையாய இருக்கிற கடவுளும், அனுமதித்துக்கொண்டிருக்கிற கடவுளும், இன்னமும் நமது நாட்டுக்கு வேண்டுமா என்று கேட்கின்றேன். கடவுள் புரட்டு ஒழிந்தாலொழிய இந்த மிராசுதாரர்கள் ஒழியமாட்டார்கள். இவர்களது இப்படிப்பட்ட அகந்தையும் ஆணவமுமான காரியங்களும் ஒழியாது. உங்கள் தரித்திரங்களும் ஒழியாது.

ஆகையால் இவைகளை யெல்லாம் நன்றாய் யோசித்து உங்கள் கஷ்டத்திற்கும் அறிவீனத்திற்கும் காரணம் என்னஎன்று கண்டு பிடித்து அதன் படிநடவுங்கள் என்று பேசினார்.

பிறகு தலைவர்தோழர் துரைசாமிக் கவுண்டரவர்கள் உபன்யாசகர் சொன்னவைகளை சிந்தித்துப்பார்க்கும்படி சொன்னார். தோழர் சி. கே ராமசாமி முதலியாரவர்கள் தலைவருக்கும் உபன்யாசகருக்கும் நன்றி செலுத்தினர். இரவில் தோழர் வி எஸ். செங்கோட்டையா அவர்கள் வீட்டில ஒரு விருந்து நடந்தது.

———

# காங்கிரஸ் ஸ்தம்பித்து விட்டது.

## 'சுதேசமித்திரன்' 'தமிழ் நாடு' 'இந்து' அபிப்பிராயம்.

தற்கால காங்கிரஸ் நிலைமையைப் பற்றி "சுதேசமித்திரன்" பத்திரிகையில் நாளது மாதம் 11ந்தேதி தலையங்கத்தில் காணப்படும் சில குறிப்புகளாவன:—

"இந்தியாவில் தற்கால நிலையில் சீர்திருத்தங்களுக்காகப் போராடி வெற்புறுத்தும் சக்திகள் குறைந்துகொண்டிருக்கின்றன. சீர்திருத்தங்களுக்காக வெகுவாக பிரயாசைப்பட்ட தேசிய உணர்ச்சியானது தலைவரிழந்து சக்திகுறைந்து வருகிறது"

"இந்நிலையை எவ்விதம் பரிகரிப்பது? சோர்வடைந்திருக்கும் ராஜிய கிளர்ச்சிகளுக்கு எவ்விதம் புத்துயிரளிப்பது"

"காங்கிரஸ்ஸ்தாபனமானது, தனது சக்திகளை, பல துறைகளில், பல பிரச்சனைகளில் திருப்பி வலுவற்றதாகச் செய்துக்கொள்ளக்கூடாது. இதர பிரச்சனைகள் சமுதாய வாழ்விற்கு எவ்வளவு முக்கியமானதாயினும், இந்தசமயத்தில் ராஜிய பிரச்சனையேமுதல் பெறவேண்டும். சட்ட மறுப்பு கொள்கை வெற்றி பெறுவதற்கு, ஆதியில் எவ்வளவு சௌகரியங்களிருந்த போதிலும் தற்காலம் அது பயன் படாதென்றோ, அல்லது அதற்குத்தேவையான உணர்ச்சி தேசத்தில் இல்லையென்றோ அவர்கள் கருதுவார்களானால், உடனே தேசத்தின் நலத்தை உத்தேசித்து தங்கள் திட்டத்தை திருத்தி அமைத்து விடவேண்டும்"

என்ற குறிப்புகள் ஷை தலையங்கத்தில் காணப்படுகின்றன.

ஆகவே, இதன் உண்மைத்தத்துவம் என்ன என்பதை வாசகர்கள் ஊகித்து பார்க்க வேண்டுமாய் விரும்புகின்றோம். அரசியல் கிளர்ச்சி தோல்வியடைந்து விட்டதென்றும், மற்றும் தலைவர்கள் என்பவர்கள் தீண்டாமை, விலக்கு, பரதேசி மறியல், சுதேசிப்பிரசாரம், மற்றும் தபாலாபீஸ் பகிஷ்காரம், முதலிய பல சில்லரை விஷயங்களில் கவனத்தைச்செலுத்தி தொண்டர்களும், தலைவர்கள், என்கின்றவர்கள தங்கள் தங்களிஷ்டப்படி, தலைவிரிகோலமாய் திரிந்ததின்பலனாய். கிளர்ச்சி ஸ்தம்பித்து விட்டது. வலு குறைந்து விட்டது. வெற்றிபெற போதியதாக இல்லை. தேசம்இதுசமயம், போதிய உணர்ச்சி பெற்றதாயில்லை. என்றும் ஆதலால் தீண்டாமை முதலிய விஷயங்களையும் மறியல், பகிஷ்காரம் முதலிய பல விஷயங்களையும் விட்டு விட்டு குறிப்பாக, சிறப்பாக ஆலய பிரவேச விஷயத்தில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு ஒரு புதிய திட்டத்தை அதாவது சர்க்காரோடு ஒத்துழைத்து எதாவது ஒரு வழியில் காங்கிரஸ் தோல்வியுறவில்லை யென்றும் வெற்றி பெற்றதென்றும் பாமர மக்கள் நினைக்கும்படியாக ஒரு தந்திரம் செய்ய வேண்டும் என்று சூசனை காட்டுவதாகவே இருக்கிறது. இந்த அபிப்பிராயம் சுதேசமிதத்திரனுக்கு மாத்திரம் இப்பொழுது தோன்றி இருப்பதாக அதைக் குற்றம் கூறுவதற்கில்லை ஏனெனில் மற்றொரு பத்திரிகையாகிய.

### "தமிழ் நாடு"

"தமிழ்நாடு" பத்திரிகையும் அதே பிப்பிரவரி மீ 11ந்தேதி தனது தலையங்கத்தில் காங்கிரசின் வீழ்ச்சியைப் பற்றி சிறிது சூசனைக் காட்டியிருக்கிறது என்ன வென்றால்

"காங்கிரஸ் இயக்கத்தின் வேகம் குன்றிவிட்டதால் தோழர் காந்தி தீண்டாமை விலக்குப்போர் தொடுத்திருக்கிறார்" என்று எழுதியிருக்கிறது.

இந்த இரண்டு பத்திரிகைக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால்சுதேசமித்திரன் பத்திரிகையானது தோழர் காந்தி அவர்கள் "தீண்டாமை" விலக்கு கோவில் பிரவேசம் முதலிய வேலைகளில் பிரவேசித்ததால் காங்கிரஸ் ஸ்தம்பித்துப் போய் விட்டதென்று சொல்லுகிறது.

"தமிழ்நாடு"பத்திரிகையோ அந்தப்படி சொல்லாமல் காங்கிரஸ் இயக்கம் ஸ்தம்பித்துப்போய் விட்டதால் தோழர் காந்தி "தீண்டாமை விலக்கு" வேலையைத் தொடங்கி இருக்கிறார் என்றெழுதி இருக்கிறது

எது எப்படி இருந்தாலும் இரண்டு தேசிய பத்திரிகைகளும் காங்கிரஸ் ஸ்தம்பித்துப் போய் விட்டதென்பதை கண்ணியமாக ஒப்புக் கொள்ளுகின்றன.

### ஹிந்து

இதோடு "ஹிந்து"பத்திரிகையின் யோக்யதையையும் சற்று கவனிப்போம். அதாவது "இந்து"பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதிய கடிதமொன்று பிப்பிரவரி மீ 14-தேதி சுதேசமித்திரன், பத்திரிகையில் மொழிபெயர்த்திருப்பதாவது.

"சட்டத்தினாலும் இராணுவத்தினாலும் ஏராளமான பலத்தையுடைய இந்திய கவர்மெண்டானது ஒற்றுமை யற்றதும் சரியான ஒரு தலைவா ரற்றதும் ஆன காங்கிரவிற்கு தோற்றுப் போவதென்பது, லேசான காரியமல்ல"

"ராஜிய இயக்கம் சரியாக நடத்தப்படவில்லை யென்று அநேக ஜனங்கள் அபிப்பிராயப் பட்டிருக்கின்றார்கள். சென்ற சிலவருஷங்களாக (காங்கிரஸ்) செய்து வந்திருப்பது கண்மூடித்தனமாய் எதிரில் முட்டிக் கொள்ளுவது போலிருப்பதால், அது இந்திய கவர்மெண்டை அசைக்க முடியவில்லை"

"மகாத்மா காந்தி உலக ஜனங்களின் மதிப்பைப் பெற்றிருக்கிறார் என்றாலும் இக்கால ராஜியத்துறையில் வெற்றி பெற அவர் அருகதையற்றவர்."

"சட்ட மறுப்பியக்கம் பிரமாதமான பலனைத் தந்துவிடு மென்று பல தேசியவாதிகள் அளவுக்கு மீறி நம்பினது சிரிப்பாக விருக்கிறது"

'இப்படி வீண் நம்பிக்கை கொள்ளவேண்டா மென்று எங்களில் சிலர் அப்பொழுதே எச்சரிக்கை செய்தோம். நாங்கள் நினைத்தது சரியென்று இப்பொழுது ஏற்பட்டு விட்டது. இந்தியாவின்கட்சி நியாயமானதென்றவர்களுடைய நம்பிக்கை குறையவில்லை. ஆனால்இந்தியாவின் இலட்சியத்தை அது குறுக்கு வழியில் போய்ப்பெற்று விடாதென்று தெரிந்துகொள்ள விசேஷ சாமர்த்தியம் தேவையில்லை"

"இந்தியாவின் கோட்டையைப்பிடிக்கப் பெறும் கூச்சல் மாத்திரம் போதா தென்பது, அனுபவத்தில் தெரிந்து விட்டது. ஆர்ப்பாட்டங்கள் மறியல்கள், பகிஷ்காரங்கள், ஆகிவைகள் வெற்றி பெற்று விடமுடியுமானால் இதற்குள் வெற்றி பெற்றிருக்கவேண்டும்"

"சட்டசபைகளுக்கு வெளியில் தேசியவாதிகள்மூடத்தனமாக வேலை செய்து வந்திருப்பதுபோல், சட்டசபைகளில் அவர்கள் சரியான வேலை செய்து வந்திருந்தால் அடக்குமுறைக்குக்கையாளாகச் சட்டசபைகளை உபயோகித்திருக்க முடியாது. காங்கிரஸ் சேர்ந்து சட்டசபையில் கவர்ன்மெண்டைநெருக்கி வந்திருப்பார்களாயின் ஒத்துழையாமைக் காட்டில் அவர்கள் சஞ்சாரம் செய்து வந்ததில் அடைந்துள்ளதைக் காட்டிலும் அதிகப்பலனை அடைந்திருப்பார்கள்"

"இப்பொது மகாத்மா தீண்டாமையை ஒழிக்க முனைந்திருப்பது போல் ராஜீத்துறையில் முனைந்திருக்க வில்லை என்று தெரிகின்றது. இந்த மதசம்பந்தமான பிரச்சனையை கிளப்பிவிட்டதால் ராஜீயப்பிரச்சனை சிறிது அசட்டைச் செய்யப்பட்டு விட்டதாக இங்குசிலர் நினைக்கின்றார்கள்" என்று எழுதிஇருக்கிறது.

ஆகவே 'சுதேசமித்திரன்', 'தமிழ்நாடு,' 'இந்து', ஆகிய மூன்று "தேசிய" பத்திரிகைகளும் உள்ளதை ஒரு அளவுக்கு ஒப்புக்கொண்டன. ஆனால் "சுதேசமித்திரன்" "இந்து" ஆகிய இரண்டு பார்ப்பனத் தேசியப்பத்திரிகைகளும் காந்தியை தீண்டாமை வேலையை விட்டு விட்டு சர்க்காரோடு ஒத்துழைக்கும்படி ஜாடைகாட்டுகின்றன. "தமிழ் நாடு" பத்திரிகை வருணாச்சிரமத்தையும் ஜாதிப்பிரிவையும் ஒழிக்க வேலை செய்யும்படி சொல்லுகின்றது. ஆனால் தொண்டர்கள், தேச பக்தர்கள், தேசியவாதிகள் இதை எப்படி ஒப்புக் கொள்ளமுடியும்? 'அரசியலுக்குவேறு வேலை வேண்டாமா?' எலக்ஷன்களில் வெற்றி பெறுவதற்கு வேறு தந்திரங்கள் வேண்டாமா? சிலருக்கு சாப்பாட்டிற்கே வேறு வழி வேண்டாமா? ஆகையால் மேல்கண்ட பத்திரிகைகள் இதற்கு ஒரு வழி காட்டுமா. என்று கேட்ப்பார்கள்.

---

## வேண்டுகோள்.

சுயமரியாதைக் கிளை சங்கங்களுக்கு மாமாங்க பகிஷ்கார வால்போஸ்டுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளை தயவு செய்து சங்கக்காரர்கள் முக்கிய இடத்தில் ஒட்டவேண்டுமாய் கோருகிறோம். மற்றும் தேவையானவர்கள் ஸ்டாம்பு அனுப்பினால் வால்போஸ்டு அனுப்பப்படும்.

---

## தென்னிந்திய செங்குந்தர் 4வது-மகாநாடு. திருவாரூர்.

13-2-33ந்தேதி கூடிய வரவேற்பு கமிட்டி கூட்டத்தில் கீழ்கண்ட விஷயங்கள் முடிவு செய்யப்பட்டன.

(1) மகாநாட்டிற்கு ஐம்பது தொண்டர்களையாவது சேர்க்கவேண்டும் ஒரேமாதிரியான உடுப்பு தரவேண்டும்.

(2) தொண்டர் படைத் தலைவர், தோழர் பி. முருகைய முதலியார், துணைத்தலைவர்கள் தோழர் எஸ்.கந்தசாமி முதலியாரும், கே. முத்து வேல் முதலியார்.

(3) வரவேற்பு டிக்கட் ரூபா இரண்டு. பிரதிநிதி டிக்கட் ரூபா ஒன்று. பெண்களுக்கும் விசிட்டர்களுக்கும் இனாம்.

(4) வரவேற்பு அங்கத்தினர் டிக்கட்டுக்கும் பிரதிநிதி டிக்கட்டுக்கும் போஜன டிக்கட் சேர்க்கப்படும்

(5) போஜன டிக்கட் உடையவர்கள் மட்டும் சாப்பாட்டு விடுதியில் அனுமதிக்கப்படுவர். பெண்கள் மட்டும் இனாமாக அனுமதிக்கப்படுவர். என விளம்பர சபையார் அறிவிக்கிறார்.

# குடி அரசு.

ஈரோடு 1933 பிப்ரவரி௴ 19-உ

## ரகசியம் வெளிப்பட்டதா?

காங்கிரசினுடையவும், காந்தியினுடையவும், கொள்கைகளும் அதுசம்பந்தமான கிளர்ச்சிகளும், முதலாளிமார்களுக்கும், உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களுக்கும் மாத்திரமே நன்மை பயக்கத் தக்கதென்றும், காங்கிரசும், காந்தியும், பணக்கார முதலாளிகளுடையவும், 'படிப்பாளி'களாகிய சோம்பேரிகளுடையவும் ஆயுதங்களே என்றும் இந்த 7, 8 வருஷ காலமாகவே நாம் தெரிவித்துக்கொண்டு வந்திருக்கின்றோம்.

இதன் பயனாய் தேசியப்புலிகள்-தேசபக்த வீரர்கள்-என்பவர்கள் நம்மீது சீறிப்பாய்ந்து நம்மை தேசத்துரோகி என்றும், மதத்துரோகி என்றும் பட்டம் சூட்டி. கண்டபடி வைததோடல்லாமல் குத்திவிடுவதாகவும், சுட்டு விடுவதாகவும் வீரம் பேசி ரத்தத்தில் (தோய்த்து) கையெழுத்துச்செய்த பல எச்சரிக்கைக்கடிதங்களையும் அனுப்பினார்கள்.

இவைமாத்திரமல்லாமல் தேசியப்பத்திரிகை என்பவைகளும் மதப்பத்திரிகை என்பவைகளும் நமக்கு இழைத்த திங்குகளுக்கும் கொடுத்த தொல்லைகளுக்கும் அளவேயில்லை. ராமசாமியையும் சுயமரியாதைஇயககத்தையும்அடியோடொழித்தாலொழிய தேசியம் வெற்றிபெறாது என்றும், இவற்றை ஒழிப்பதே ஒருபெரியதேசியவேலை என்றும் பேசினார்கள், எழுதினார்கள். சோம்பேரிகளையும் காலிகளையும் ஏவியும்விட்டார்கள்.

மற்றும் மேடையில் ஏறிப் பேச சௌகரியம் கிடைக்கப்பெற்றவர்கள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தையும் ராமசாமியையும் வைவதும், பேனாப்பிடித்து எழுத சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றவர்கள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தையும் ராமசாமியையும் தாக்கி எழுதுவதுமான காரியங்களையே நடத்திவந்தார்கள்.

எல்லாவற்றையும்விட இந்த இரண்டு வருஷ காலமாய் அதாவது சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு, மறியல் என்கின்ற பெயர்களால் சிலருக்கு ஜெயிலுக்குப் போக சந்தர்ப்பம் கிடைத்தவுடன் அவர்கள் எல்லாம் ஜெயிலிலிருந்து வெளியாகும்போதே ஒவ்வொருவரும்தங்களை பெரிய வீரர்கள் என்றும், சூரர்கள் என்றும், பிரமாதமான காரியத்தைச் செய்து சாதித்துவிட்ட மேதாவிகள் என்றும் நினைத்துக்கொண்டு ஜெயில் வாசல்படியிலிருந்து வெளிவரும்போதே சுயமரியாதை இயக்கத்தையும் ராமசாமியையும் சின்னாபின்னமாகக் கிழித்தெறிந்து விடப்போவதாய் கருதி ஆவேசத்துடனேயே வருவதும் தலைகால் தெரியாமல் துள்ளித் துள்ளிக்குதிப்பதுமாய் நடந்து வந்தார்கள்.

ஆனால்நம்மைப்பொருத்தவரை நாம் இதை உணர்ந்தும் ஒருஅளவுக்கு இதன் பயனை அனுபவித்துக் கொண்டுமிருந்தாலும் கூட உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கும்போதே இந்த சத்தியாக்கிரகம் மக்களுக்கு யாதொரு பயனையும் அளிக்காதென்றும் இது எந்த விதத்திலும் வெற்றியடைந்ததாக கருதும்படியாகவாவது யாதொருகுறிப்பையும் உண்டாக்காதென்றும்இதுபோஸ்ஸென்றுபோய்விடும்என்றுமேஎழுதினோம் மற்றும் இதனால் ஏதாவது பலன் ஏற்பட்டதாகச் சொல்லிக்கொண்டாலும் அது பணக்காரர்களுக்கும் சோம்பேரி வாழ்க்கைக்காரர்களான மேல் ஜாதிக்காரர்கள் என்பவர்களுக்கும் தான் பயன்அளிக்குமே தவிர ஏழை மக்களுக்கும் கஷ்டப்பட்டு உழைக்கும் மக்களுக்கும் யாதொரு பயனையும் உண்டாக்காது என்றும் பந்தயங் கட்டிக்கூறவந்தோம்.

கடைசியாக என்ன நடந்தது? என்பதை சற்று சிந்திப்போம். முதல் மூச்சு (உப்பு) சத்தியாக்கிரகமானது பம்பாய் மில் முதலாளிகளினுடைய பண உதவியாலும் பார்ப்பனர்களுடையபத்திரிகையின் உதவியாலும், பிரசார உதவியாலும் பதினாயிரக்கணக்கான மக்களை ஜெயிலுக்கு அனுப்ப முடிந்தும, கடைசியாகஎதை எதிர்த்து சத்தியாக்கிரகம் துடங்கப் பட்டதோ அதிலேயே (சைமன் கமிஷனின் வட்டமேஜைமகாநாட்டிலேயே) தானாகவே போய் கலந்து கொள்ளுகிறது. என்கின்ற நிபந்தனையின்மீது ராஜியாகியேஎல்லோரும்ஜெயிலிலிருந்துவெளிவர வேண்டியதாயிற்று. அதாவது "சட்டமறுப்பைநிறுத்திக் கொள்ளுகிறேன், ராஜாக்களும் மகாராஜாக்களும் ஜமீன்தாரர்களும், முதலாளிமார்களுமாய் 100க்கு 90 பேர் கூடிப் பேசி இந்தியாவின் அரசியல் சுதந்திரங்களைத் தீர்மானிக்கப்போகும் வட்ட மேஜை மகாநாட்டில் நானும் கலந்து கொள்ளுகிறேன், அதுவும் அவர்களுடைய நிலைமைக்கு அதாவது அந்த ராஜாக்கள், மகாராஜாக்கள், ஜமீன்தாரர்கள் முதலாளிமார்களுடைய இன்றைய நிலைமைக்கு எவ்வித குறைவும் ஏற்படாதபடி. தீர்மானிக்கப் போகும் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிறேன்" என்பதாக ஒப்புக் கொண்டு "ராஜி" பேசித்தான் ஜெயிலில் இருந்து விடுதலையாக வேண்டியிருந்தது.

அந்த ராஜியும், வட்டமேஜை மகாநாட்டுக்கு காங்கிரசும் காந்தியும்சென்றுவரும் வரையில் தான் இருக்க முடிந்ததே தவிர வேறில்லை. ஆகவே அது முடிந்தவுடன் மறுபடியும் ஒரு தடவை சத்தியாக்கிரகமோ மறியலோ தொடங்கித்தீரவேண்டியதாய் விட்டது. இதிலும்முதலாளிகளுடையபண உதவியும் பார்ப்பனர்களுடைய பத்திரிகை உதவியும் பிரசார உதவியும் தாராளமாய் கிடைத்தது என்றே சொல்லலாம். இதனாலும் பதினாயிரக்கணக்கான பேர் மறுபடியும் ஜெயிலுக்கு போனார்கள் என்றும் சொல்லலாம். ஆனால் என்ன நடந்தது? முன்போல ஒரு ராஜி என்பதற்கு கூட மார்க்கமில்லாமல் மன்னிப்புக்கேட்டாலொழிய, அதாவது இனிமேல் அப்படிச்செய்வதில்லை யென்று சொன்னாலொழிய வெளியில் விடுவதில்லை என்று சர்க்கார் சொல்லும் நிலையில் இருக்கிறது. காந்தியும் ஏதோ ஒரு வழியல் சர்க்காருக்கு அந்தவித உறுதியைக்கொடுத்துவிட்டோ அல்லது அந்தவித உறுதி சர்க்காருக்கு ஏற்படும்படி ஏதாவது ஒரு சூசனையைக்காட்டி விட்டோ விடுதலை ஆகப்போகின்றார் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. ஆனால் இவற்றினால் எல்லாம் கஷ்டப்படும் மக்களுக்கு ஏறபட்ட பலன் என்ன எனபதுதான நமது கேள்வி.

புதிய சீர்திருத்தம் என்பது அதன்பாட்டுக்கு தானாகவே சைமன் கமிஷன் தீர்மானித்தபடி. அல்லது ஒரு வழியில் சற்று அதிகமாகவோ மற்றொரு வழியில் சற்று குறைந்து ஏதோ ஒருவழியில் அரசாங்கத்தாருக்கும் முதலாளிமார்களுக்கும் சுதேச ராஜாக்கள், ஜமீன்தாரர்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள், பார்ப்பனர்கள் ஆகியவர்களுக்கும் எவ்வித மாறுதலும குறைவும் இல்லாமலும் அவர்களுக்கு என்றென்றைக்கும் எவ்வித குறையும்மாறுதலும் ஏற்பட முடியாமலும் ஒரு சீர்திருத்தம் வரப்போகின்றது—வந்தாய்விட்டது என்பது உறுதி. இந்த சீர்திருத்தமானது பெரிதும் பணக்காரக்கூட்டமும், சோம்பேரிக்கூட்டமுமே நடத்திவைக்கத்தகுந்தமாதிரிக்கு, அதாவது அந்த கூட்டத்தார் கைக்கேபோய்ச்சேரும் மாதிரிக்கு இப்பொழுதிருந்தே பிரசாரங்கள் நடந்தும் வருகின்றன. ஆகவே ஏதோ ஒருவழியில் அந்தவேலை முடிந்துவிட்டது இனி இந்த நிலையில் அரசியல் மூலம் ஏழைகளுக்கு ஏதாவது ஒரு சிறு பலனாவது உண்டாகும். என்று சொல்வதற்கில்லை.

இப்படியெல்லாம் முடிந்ததற்கு ஏதாவது ஒரு இரகசியம் இருந்துதான் ஆகவேண்டும். அந்த ரகசியம் என்ன? என்பதுதான்இந்ததலையங்கத்தின் கருத்து.

இவ்விதக் கிளர்ச்சிகளையெல்லாம் காங்கிரசின் பேரால் காந்தியவர்கள் சென்ற இரண்டு வருஷங்களுக்குமுன் ஆரம்பித்த காலத்திலேயே இதை (இந்த சட்ட மறுப்பு உப்பு சத்தியாக்கிரகம்) எதற்காக ஆரம்பிக்கின்றேன் தெரியுமா? என்று சர்க்காருக்கும் மற்றும் முதலாளிமாருக்கும், உயர்ந்த ஜாதியாராகிய சோம்பேரிக்கூட்டங்களுக்கும் தெரியும்படியாக) ஒரு விளம்பரம் வெளிப்படுத்தி இருககிறார். அவ்விளம்பரம் என்ன என்று ஞாபகபபடுத்திப் பார்த்தால் இதன் இரகசியம் இன்னதென்று விளங்கிவிடும். அது என்னவென்றால்,

"நான் இன்று இந்தக்கிளர்ச்சி (உப்பு சத்தியாக்கிரகம) ஆரமபிக்காவிட்டால் இந்தியாவில் பொது உடமைக்கிளர்ச்சி ஏறபட்டுவிடும் ஆகையால் (அதை அடக்கவும மக்கள் கவனத்தை அதில் செல்லவிடாதபடி வேறு பக்கததில் திருப்பவும) இதை(உப்புசத்தியாக்கிரகத்தை) ஆரமபிக்கின்றேன்" என்று சொல்லியிருக்கிறார்.

அன்றியும் இவ்வித கிளர்ச்சிகளால் சர்க்காருக்கு ஏதாவது கெடுதி ஏற்பட்டதா அல்லது அவர்களின் நிலைமைக்கு ஏதாவது குறைவு ஏற்பட்டதா என்று பார்த்தால் யாதொரு குறைவும் ஏற்பட்டுவிடவில்லை, அதுபோலவே தோழர் காந்திக்கும் ஏதாவது கெடுதியோ குறைவோ ஏறபட்டதா என்று பார்த்தால் அதுவும ஒரு சிறிதுமில்லை,

அதற்கு பதிலாக காந்திக்கு உலகப்பிரசித்தமான பெரிய பேர் ஏற்பட்டு விட்டது. உலகத்திலுள்ள பாதிரிகளும் செல்வவான்களும் அவர்களை ஆதரிப்பவர்களும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் புகழ்ந்தவண்ணமாகவே இருக்கிறார்கள். காந்தியவர்கள் சிறைப்பட்டதிலாவது அவருக்கு ஏதேனும் கெடுதி ஏற்பட்டதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. சிறையில் அவருக்கு ராஜபோகத்தில் குறைவில்லை. அவருடைய உபதேசத்தைக் கேட்க ஜெயில் வாசற்படியில் எப்போதும் ஆயிரக்கணக்கானபேரும்அவருடைய தரிசனையைப்பார்க்க எப்போதும் பதினாயிரக்கணக்கான பேரும் நின்றவண்ணமாய் இருந்ததோடு இருக்கிறதோடு இந்தியாவிலுள்ள முதலாளித்தன்மைகொண்ட பத்திரிகைகள் எல்லாம் தங்கள் தங்கள் பத்திரிகைகளில் அரைவாசிப்பாகத்துக்கு மேலாகவே காந்தியின் புகழும் அவரது திருவிளையாடல்களும், அவரது உபதேசங்களுமாகவே நிறப்பப்படுகின்றன. அவரது அத்தியந்த சிஷ்யர்களுக்கும் யாதொரு குறைவுமில்லை. சென்ற விடமெல்லாம் சிறப்புடனே பதினாயிரக்கணக்கான கூட்ட மத்தியில் வரவேற்று உபதேசம் கேட்கப்படுவதாகவே யிருக்கின்றன. காந்தி அவர்களது குடும்பத்துக்கும் யாதொருகுறைவும் இல்லை. அவர்களுக்கும் அது போலவே நடைபெறுகின்றன.

ஆனால் போலீசார் கைத்தடியால் அடிபட்டுஉதைபட்டு அறைபட்டு மயஙகிககிடந்தவர்களுக்கும் காயப்பட்டவர்களுக்கும் சிறையில் சென்று கஷ்டப்பட்டவர்களுக்கும் என்ன நடந்தது? என்று பாருங்கள். ஜெயிலிலும் பணக்காரனுக்கும் சோமபேரிகளுக்கும் ஏ. பி. வகுப்புகளும் பாடுபடுகின்ற கூட்டத்திறகு சி. வகுப்புமாய்த் தான் இருந்தது. (இதறகாக தோழர் காந்தி ஒரு நேரம் பட்டினி இருந்திருப்பாரானால் ஜெயிலிலும் இந்தக் கொடுமை இருந்திருக்க முடியுமா? அதுவேறு சங்கதி) ஆகவே ஒரு அறிவாளி நடுநிலைமையாளி இந்த சுமார் 2 வருஷ காலமாக இந்தியாவில் நடை பெற்ற காந்தி திருவிளையாடல்களை நன்றாய் கூர்ந்து கவனித்து இருப்பானேயானால் தோழர் காந்தி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு என்று சொல்லப்படும் முதலாளி ஆதிக்கத்திற்கு ஒரு ஒற்றனாக கவர்ன்மெண்டாருடைய ஒரு இரகசிய அனுகூலியாக இந்து வந்தவர் என்றும் ஏழை மக்கள் சரீரத்தால் பாடுபட்டு உழைக்கும் மக்களுக்கு துரோகியாய் இருந்து வந்திருக்கிறார் என்றும் சொல்ல வேண்டுமே ஒழிய வேறு ஏதாவது, சொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம். பணக்காரனும் சோம்பேரியும் காந்தியை புகழ்கின்றான் வெளிநாட்டுப் பாதிரியும் பணக்காரனும் ஆதிக்கத்தில் இருப்பவனும் காந்தியைப் புகழ்கின்றான் சர்க்காரும் அவருக்கு மரியாதை காட்டுவதுடன் அவருக்கு இனமும் அதிக செல்வாக்கும் மதிப்பும் ஏற்பட வேண்டிய தந்திரங்களை யெல்லாம் பாமர ஜனங்களுக்கு தெரியாமல் படிக்கு செய்து கொண்டும் வருகின்றன.

இவைகளைப் பார்த்தால் எந்த மூடனுக்கும் இதில் ஏதோ இரகசியமிருக்க வேண்டும் என்று புலப்பட்டு விடும்.

ஏனெனில், நாளைய தினம் தோழர் காந்தியவர்கள் "இந்த சர்க்காரோடு நான் ஒத்துழைக்க வேண்டியவனாகி விட்டேன்எனெனில் சட்ட சபைகள் மூலம் அனேக காரியங்கள் ஆகவேண்டியிருக்கின்றது. ஆதலால் ஒத்துழையுங்கள் இல்லா விட்டால் பொது உடமைக்காரரும் சமதர்மக்காரரும் சட்டசபையைக்கைப் பற்றி-தேசத்தை மனித சமூகத்தை பாழாக்கி விடுவார்கள்."

என்று (மதராஸ் காங்கிரசுக்காரர் "ஜஸ்டிஸ் கட்சியை அழிக்க சட்ட சபைக்கு போய் மந்திரிகளை ஆதரிக்க வேண்டியிருக்கது" என்று சொன்னது போல்) சொல்லுவாரேயானால (சொல்லப் போகிறார்) அப்போது ஜனங்கள்-பாமர ஜனங்கள் யாதொரு முனுமுனுப்பும் இல்லாமல் உடனே கீழ்படிவதற்குத் தகுந்த அளவு காந்திக்கு எவ்வளவு செல்வாக்கும் பெருமையும் வேண்டுமோ அவ்வளவும் ஏற்படுத்த வேண்டியது இன்று சர்க்கார் கடமையாய் இருந்து வருகின்றது. இவ்வளவோடு நிற்கவில்லை காந்தியின் புண்ணிய கைங்கரியம். மற்றும் கொடுமைப்படுத்தப்பட்ட மக்களாகிய உழைப்பாளிகளான தீண்டாத வகுப்பார் என்பவர்கள் எப்படியோ முன்னுக்கு வருவதான ஒரு வழியை அடைந்தவுடன் அவர்களையும் என்றென்றும் உழைப்பாளிகளாகவே ஊராருக்காக கஷ்டப்படும் மக்களாகவே இருக்கும்படியான மாதிரிக்கு அவர்களை ஹரிஜனங்கள் என்னும பேரால் ஒருநிரந்தர ஜாதியாராக்கி வைக்கவேண்டிய ஏற்பாடுகளும் நடக்கின்றன. அதைப்பற்றி தோழர் அம்பெத்காரின் அறிக்கையும்—காந்தியாரின் மறுமொழியும் தமிழ்நாடு பத்திரிகையின் தலையங்கமும் ஆகிய சுருக்கங்களை மற்றொரு பக்கம் பிரசுரித்திருக்கிறோம். அதைப்பார்த்தால் ஒரு அளவுக்கு விளங்கும்.

காந்தியாரின் சுயராஜ்ஜியக் கொள்கைகளில் முக்கியமானது வருணாச்சிரமதர்மமும் ஜாதிமுறையும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதாகும் 'காந்தியின் வருணாச்சிரமகொள்கைக்கு வேறு அருத்தம்' என்று சிலர் சொல்லுவதானாலும் அந்தவேறு அர்த்தம் இன்னது என்பதை காந்தியாரே பல தடவை சொல்லியிருக்கிறார் அதாவது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்கு வருணம் பிறவியில் உண்டு என்றும் அவர்கள் ஒவ்வொருவரும் முறையே அறிவு பலம் வியாபாரம் சரீரத்தினால் உழைப்பு ஆகியவைகளிலேயே ஈடுபடவேண்டியவர்கள் என்றும் சொல்லுகிறார்—ஜாதி முறைக்கும் காந்தியார் கூறும் தத்துவார்த்தமானது தொழில்களுக்காக ஜாதிமுறை ஏற்பட்டதென்றும் அந்த ஜாதிமுறையும் பிறவியிலேயே ஏற்பட்டதென்றும் அந்தந்த ஜாதியானுக்கு ஒரு பிறவித்தொழில் உண்டென்றும் அந்தந்த தொழிலையே—அவனவன் ஜாதிக்கு ஏற்ற தொழிலையே அவனவன் செய்துதீரவேண்டும். என்றும் சொல்லுகின்றார். இவ்வளவோடு மாத்திரமல்லாமல் "இந்தமாதிரியான வருணாச்சிரம தர்ம முறையையும், ஜாதிமுறையையும் நிலைநிறுத்தவே சுயராஜ்ஜியத்திற்கு பாடு படுகிறேன்" என்றும் கூறுகிறார். இந்த முறையில் காந்தியாரால் யாருக்கு லாபம் யாருக்கு சுகம் என்பதையும் யாருக்கு நஷ்டம், யாருக்கு கஷ்டம் என்பதையும் வாசகர்களையே சிந்தித்துப்பார்த்து முடிவு செய்துகொள்ளும்படி விட்டுவிடுகின்றோம். ஆகையால் காந்தியார்ன் அரசியல் கிளர்ச்சியின் ரகசியமும் தீண்டாமை விலக்கு கிளர்ச்சியின் ரகசியமும் இப்போதாவது மக்களுக்கு வெளிப்பட்டதா இல்லையா என்று கேள்க்கிறோம். தலையங்கம் நீண்டுவிட்டதால் வருணாச்சிரமத்தைப்பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

---

## மாமாங்கம்.

——:0:——

கும்பகோணத்தில் நடைபெறப் போகும் மாமாங்க விஷயமாய் சென்ற வாரம் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். மாமாங்கம் என்பது இந்து மதத்தில் சம்மந்தப்பட்ட ஒரு புண்ணிய (நல்ல) காரியமாக பாவிக்கபபடுகின்றது என்றாலும், அது பெரிதும் சுயநலக்காரர்களாகிய முதலாளிமார்கள், சோம்பேரி வாழ்க்கைக்காரர்கள் ஆகிய இருகூட்டத்தாரின் விளம்பரங்களின் மூலமாகவே அது பிரபலபபட்டு மக்கள் அதில் ஈடுபடுகின்றார்கள். மாமாங்கத்தை விளம்பரம் செய்யும் இவர்கள் மூன்று வகையாவார்கள். ஒன்று பார்ப்பனர்கள், இரண்டு வியாபாரிகள், மூன்று ரயில்வேக்காரர்கள். இம்மூவருக்கும் அனுகூலக்காரராகவும் கூலிக்காரராகவும் இருக்கும் சில பத்திரிகைக்காரர்கள் மூலமே அதிக விளம்பரமாகின்றது

இதன் பயனாய் மாமாங்கத்திற்கு பல ஜனங்கள் வருவார்கள் என்று நாடகக்காரர்கள், சினிமாக்காரர்கள், சூதாட்டக்காரர்கள், விபசாரக் குச்சிக்காரிகள் மற்றும் முடிச்சவிழ்க்கும் (சட்டைப்பை) திருடர், தந்தித்திருடர், கத்திரிக்கோல் திருடர், முதலிய திருட்டுவகைக்காரர்களும் ஏராளமாய் வந்து, தங்கள் தங்கள் தொழில்களை நடத்துவார்கள். அங்கு ஏற்கனவே உள்ள சாராயக்கடைகளிலும் வெகு நெருக்கடியாய் வியாபாரம் நடக்கும். இவைகள் தவிர அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய் முதலிய ஆகாரத்திற்கு அவசியமாய் வேண்டிய சாமான்களாக இல்லாமல் வேறு அநேகவித சாமான்கள் அதாவது விளையாட்டு சாமான்கள், வேடிக்கை சாமான்கள்-அதிசய சாமான்கள்-அற்புதசாமான்கள், பிரபுக்கள் வீட்டில், மகாராஜாக்கள் வீட்டில் இருக்கத்தக்க சாமான்கள் ஆகிய போக போக்கிய சாமான்களே ஏராளமாய்வரும்.

இவை தவிர காப்பிக்கடை, சோத்துக்கடை இவைகள் புதிய புதிய பெயர்களால் நன்றாய் விளம்பரம் செய்யப்பட்டு, எச்சில் மீது எச்சில் படிந்து, எச்சில் குளத்தில் சாப்பிடுவது போல் ஒட்டல்கள் விளங்கும். இவைகள் தவிர காலரா, மலேரியா இன்புளுயன்சா, அம்மை, பிளேக்கு முதலிய தொத்து நோய்களும் உண்டாகும் மற்றும் கூட்ட நெருக்கடியில்பலர் நசுக்குண்டு சாகலாம்.

இவைகள் தான் மேல் கண்ட விளம்பரங்களால் ஏற்படும் பயனே தவிர வேறு என்ன ஏற்படக்கூடும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மாமாங்க சம்பந்தமான இந்தஉண்மைகளை வெளிப்படுத்தி பாமரஜனங்களுக்கு எச்சரிக்கை செய்ததற்காக மிக மிக கோபங்கொண்டு மெயில் பத்திரிகையில் அதன் நிருபர் ஒரு

சேதி எழுதி இருக்கிறார் அதன் சுருக்கமாவது:—

"சுயமரியாதை இயக்கத் தலைவர்களும், சில காங்கிரஸ் காரர்களும் சேர்ந்து மகாமக பஹிஷ்காரம் செய்யப் புறப்பட்டு சில துண்டுப் பிரசுரங்கள் மாயவரத்திலிருந்து வெளிப்படுத்தி வருகிறார்கள். ஆனால் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள். ஏனென்றால் சுயமரியாதைக்காரர்களை நாஸ்திகர்கள் என்றே ஜனங்கள் கருதுவதால் இவர்கள் பேச்சை யாரும் கேட்க மாட்டார்கள். அன்றியும் இவர்கள் இப்படிச் சொல்லுவதாலேயே அனேகம் பேர் மாமாங்கத்துக்கு வருவார்கள், ஆதலால் சுயமரியாதைக்காரர் வேலை பயன்படாது" என்று எழுதப் பட்டிருக்கிறது.

சுயமரியாதைக்காரர்கள் நாஸ்திகர்கள் என்பதினாலேயே அவர்கள் நல்லது சொன்னாலும்கூட ஜனங்கள் கேட்கமாட்டார்கள் என்கின்ற தைரியம் "மெயில்" நிருபக்கு எப்படி ஏற்பட்டதோ தெரியவில்லை.

நாஸ்திகர் அல்லாதவர்கள் அவ்வளவு பெரிய மூடர்கள் என்று மெயில் பத்திரிகையின் நிருபர் கருதி இருப்பது அவரைத்தான் ஏமாற்றமடையச் செய்யுமே ஒழிய மற்றபடி சுயமரியாதைக்காரரை ஒன்றும் செய்து விடாது.

மாமாங்கத்திற்கு ஜனங்கள் போவதினால் சுயமரியாதைக்காரருக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. மாமாங்கத்திற்கு ஜனங்கள் போகாமல் இருந்துவிடுவதால் சுயமரியாதைக்காரருக்குலாபம்ஒன்றும்வந்துவிடப்போவதில்லை.

கால தேச நிலைமையை உத்தேசித்து இந்த மாதிரிமுற்போக்குள்ளகாலத்தில் எங்கோ ஒரு சுகாதார மற்ற ஆபாசஊரில் உள்ள ஒரு சேற்றுத் தண்ணீரில் குளிப்பதற்காக மக்கள் 10, 20, 100, 200 ரூ. வீதம் செலவு செய்து கொண்டு போய், பலவித துன்பங்களையும் நோய்களையும் சம்பாதித்துக்கொண்டு வருவது அறிவுடைமையா என்ற கருத்தின் மீதுதான் இந்தப்பிரசாரம் செய்கிறார்களே ஒழிய வேறு காரியம் ஒன்றுமில்லை. இந்திய மக்களுடைய—(சிறப்பாய்) தென்னாட்டு மக்களுடைய பகுத்தறிவை அளப்பதற்கு இந்த கும்பகோண மாமாங்கமே ஒரு முக்கிய அளவு கருவி என்றே நினைக்கின்றோம்.

அன்றியும் இதுவரை செய்து வந்த பகுத்தறிவு பிரசாரமானது எவ்வளவு தூரம் பயன்பட்டது என்பதையும் அறிய இது ஒரு சந்தர்ப்பமும் ஆகும்.

தவிர ஆங்காங்குள்ள பகுத்தறிவு சங்கத்தாரும், சுயமரியாதைச் சங்கத்தாரும், அதன் சார்புடைய மற்ற சங்கத்தாரும், தேசிய வாதிகள் என்பவர்களும் இந்த மாமாங்கப் புரட்டைப்பற்றி பாமர ஜனங்களுக்கு நன்றாய் விளக்கிப் பிரசாரம் செய்து அவர்களை இந்த மாதிரியான கஷ்டத்தில் இருந்தும், நஷ்டத்தில் இருந்தும் மீட்பார்களாக.

## 'மெயில்' பத்திரிகையின் கூற்று.

சென்னை "மெயில்" பத்திரிகையானது தனது 11-2-33 தேதி தலையங்கத்தில் எழுதுவதாவது:—

"சுயமரியாதை இயக்கமானது எல்லா மதங்களையும் துணிகரமாகத் தாக்கி வருவதுடன் மதங்களை அழிக்கவேண்டுமென்று பலமான பிரசாரம் செய்து வருகிறது. இதற்குக் காரணம் சர்க்கார் மத நடுநிலைமை வகித்திருக்கிறது என்ற ஒரே சாக்குத்தான். இதன் பயனாய் இப்பொழுது மத விஷயமான பிரசாரங்களுக்கு பொது மேடைகளில் இடமில்லாமல் போய் விட்டது. கோவிலிலும், பள்ளிவாசல்களிலும், சர்ச்சுகளிலும் மாத்திரம் தான் தனியாய் பேச முடிகின்றது. இதனால் சோவியத் ரஷியாவில் மதம் அழிந்து அத்தேசம் நாசமுற்றது போல் இங்கும் நேரலாம் என்று கருத இடமேற்படுகின்றது. மத விஷயம் மறுபடியும் பொது மேடைகளுக்கு தாராளமாய் வரவேண்டுமானால் பள்ளிக்கூடங்களில் மதத்தைப் புகுத்தியாகவேண்டும் தோழர்காந்தியையும்தீண்டாமைவிலக்குப் பிரசாரம் செய்வதை விட்டுவிட்டு சுயமரியாதைக் கட்சியை ஒழித்து அதன் பிரசாரத்தை அடக்கும் விஷயத்தில் பாடுபட்டால் அது மிகவும் பயனளிக்கும்"

என்பதாவிளங்கஎழுதிஇருக்கிறது. இதைப்பார்த்துநாம் ஒன்றும் ஆச்சரியமடையவில்லை. ஏனெனில் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி இதுவரை இந்து மதக்காரரும் இஸ்லாம் மார்க்கக்காரரும், கிறிஸ்து சமயக்காரரும் எவ்வளவு தூரம் தாக்க வேண்டுமோ. குறையும் பழியும் கூறவேண்டுமோ, அவ்வளவு தூரம் தாக்கி, குறை கூறியும் அந்தப்படியே பிரசாரம் செய்தும்பாமரமக்களை ஏவியும் வருகிறார்கள்.

ஆனால் மேற்கண்ட இந்த மதக்காரர்களைப் போலவே மனப்பான்மையும், ஊரார் உழைப்பில் வாழும் சுகவாழ்வும் கொண்ட செல்வவான்கள் என்னும் மற்றொரு மதக்காரர், அதாவது பணக்கார சுகவாசி மதக்காரர்கள் ஆன "மெயில்" பத்திரிகை இனத்தாரும் தங்களது நலத்திற்கும் ஆபத்து வருமோ என்னமோ என்ற பயத்தால்நம்மை ஏதோ ஒருவழியில் தாக்கியாகவேண்டியவர்கள் தான். ஆதலால் இவர்கள் இப்போது தாக்குவதில் நமக்கு அதிசயமொன்றுமில்லை.

ஆனால் ஒவ்வொரு தாக்குதல்காரர்களும் தாங்கள் தாக்குவதற்காகச்சொல்லும் காரணம்தான் இங்கு யோசிக்கத்தகுந்தது.

அதாவது, சுயமரியாதைப்பிரசாரத்தால் மதங்கள் ஒழிந்து கடவுள் உணர்ச்சி மறைந்துபோகுமானால் இந்த மதப்பாதுகாப்பாளர்கள் என்பவர்கள் மக்களுக்கு "மோக்ஷம் கிடைக்காமல் போய் விடுமே" "கடவுள் சன்மானம் கிடைக்காமல் போய் விடுமே" "எல்லோரும் நரகத்துக்குப்போய் விடுவார்களே" என்றுதானே கஷ்டப்படவேண்டும். அப்படிக்கெல்லாம் இல்லாமல், எதற்கெடுத்தாலும் சுயமரியாதைகாரர்களை உச்சரிப்பதுடன், சோவியத்ருஷியாவை ஜெபித்து, சர்க்காரைக்கூப்பிட்டு பூச்சாண்டி காட்டுவதின் இரகசியம் என்ன என்பதைக் கவனித்தால் மதத்தின் இரகசியமும், கடவுள் உணர்ச்சியின் இரகசியமும் தானாய் விளங்கி விடும் என்றே கருதுகிறோம்.

சோவியத் ருஷியாவில் மதமும் கடவுளுணர்ச்சியும் போய் விட்டதால் அது கடலுக்குள் முழுகிப் போய்விடவுமில்லை காற்றில் பறந்து போய் விடவுமில்லை. தீப்பற்றி எரிந்து விடவுமில்லை.

மற்றபடி சோவியத் ருஷியாவைப் பற்றி யாராவது ஏதாவது யோக்கியமான-உண்மையான குற்றம் சொல்லவேண்டுமானால் அங்கு (சோவியத் ருஷியாவில்) "ஒருவன் உழைப்பை ஒருவன் அனுபவிப்பதில்லை. எல்லோரும் எல்லோருக்காகவும் பாடுபடவேண்டியது பலனை எல்லோரும் சரிசமமாய் அனுபவிக்கவேண்டும் என்கிறார்கள்" இந்தப்படியே நடக்கிறார்கள். இதுதான் அங்குள்ள கெடுதி. இந்தக்கெடுதி சோவியத் ருஷியாவைத் தாண்டி அதற்கு 250 மைல் தூரத்திலிருக்கும் இந்தியாவுக்கும் வந்து விடுமேயானால் யாருக்கென்ன ஆபத்து வந்துவிடும். அல்லது இந்தியா எந்த சமுத்திரத்தில் மூழ்கி விடும். எந்தக்காற்றில் பறந்துவிடும். அல்லது எந்த நெருப்பில் எரிந்து சாம்பலாகிவிடும். புலி வருகின்றது. புலி வருகின்றது!! என்று போலி மிரட்டு மிரட்டுவதானது புலிவருவதைத் தடுத்துவிட முடியாது. அந்தப்படி புலியும் கிடையாது. பசுதான் வரப்போகிறது.

ஆகவே இவ்வித மிரட்டல்களையும், பழிசுமத்தல்களையும் இனிபாவது இந்தக்கூட்டங்கள் கை விட்டு விடும் என்று கருதுகிறோம்

## திருவாங்கூரில் இராமசாமியும், கேளப்பனும்.

அடுத்தவாரம்.

சென்ற வாரம் திருவாங்கூரில் தோழர்கள் ஈ. வெ. இராமசாமியும், குருவாயூர் கேளப்பனும் பருநந்தச்சென்றதும் ஆலயப்பிரவேச மகாநாடு கூட்டப்பட்டதும் அங்கு நடந்த வரவேற்புகளும் பிரசங்கங்களும் அடுத்த வாரம் வெளிவரும்.

## அம்பேத்காரும், காந்தியும்.

### டாக்டர் அம்பேத்கார் அபிப்பிராயம்.

"ஹரிஜனம்" பத்திரிகையின் முதல் இதழ் 11-ந்தேதி பிரசுரமாகிறது. அப்பத்திரிகைக்கு டாக்டர் அம்பேத்கார் கீழ்க்கண்ட செய்தியை அனுப்பியுள்ளார்.

"தீண்டாதார் என்பது ஜாதிவித்தியாச அமைப்பால் ஏற்பட்ட பயனாகும். ஜாதிகள் பல இருக்கும் வரை "தீண்டாதார்" என்பவரும் இருந்தே வருவர். ஜாதியையும் வருணாச்சிரமத்தையும்ஒழித்தாலொழிய"தீண்டாதாரின்" கதிமோட்சத்திற்கு வேறு வகையில்லை. ஹிந்து மதத்திலிருந்து இவ்வித பகைமையையும், கெட்ட முறையையும், ஒழித்தாலன்றி வரப்போகும் போராட்டத்தில் ஹிந்துக்கள் எதிர்த்து நின்று நிலைத்திருப்பது துர்லபம்."

### காந்தியின் பதில்.

டாக்டர் அம்பேக்காரின் செய்தியைப்பற்றி மகாத்மா காந்தி "ஹரிஜனம்" பத்திரிகையிலேயே எழுதுவதாவது:—

"நான் இவ்வித (அம்பேத்கார் கொண்ட) கருத்து கொள்வதற்கில்லை. வருணாச்சிரம தருமமும் ஜாதி முறையும் தீமையானதென்று நான்நினைப்பதில்லை. ஜாதிமுறையில் சில குறைபாடுகளிருக்கின்றன. ஆனால்தீண்டாமையைப்போல்அதில் பாப(குற்ற)மெதுவுமில்லை தீண்டாமை என்பது ஜாதி முறையின் பயனென்றுகூறுவது "தேகமே மலங்கள் உற்பத்திற்கு காரண"மென்று கூறுவதற்கு யொப்பாகும். தீண்டாமை இருக்கிறதே என்று ஜாதி முறையை ஒழிப்பதானது மலங்களிருக்கிறதே என்று தேகத்தை அழிப்பதற்கு ஒப்பாகும்.

தீண்டாமை ஒழிந்ததும், ஜாதி முறை சுத்தப்படும், அதாவது உண்மை வருணாச்சிரம தர்மமேற்படும். இந்து சமூகத்தில் 4 பாகுபாடுகளிருந்து (நாலு வருண தருமமிருந்து) ஒவ்வொரு அம்சமும் பரஸ்பர உதவியாக நின்று ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வின்றி சமமாக இருந்து ஹிந்துமத மனைத்திற்கும ஒவ்வொரு அம்சமும் ஆதரவளித்து நிற்கவேண்டுமென்பதே எனது மனபூர்வமான நம்பிக்கை. அவ்வித வருணாச்சிரம தர்மத்திலேயே எனக்கு பூரண நம்பிக்கை வருணாச்சிரமத்தை ஒழித்தாலன்றி தீண்டாமை நீங்காதென்று கூறும் டாக்டர் அம்பேத்கார் போன்றவர்களினின்றும் நான் அடிமுதல் வேறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன்." என்று மறுமொழி கூறி இருக்கிறார்.

## சென்னையில் பிரபல திருமணம்.

கோயமுத்தூர், தோழர், திவான் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களது குமாரர் தோழர் சி. ஆர். சதாசிவத்துக்கும் சென்னை பிரபல டாக்டர் தோழர் குருசாமி முதலியார் குமாரத்தி தோழர் ஜெய லட்சுமி அம்மைக்கும் 5—2—33 தேதி காலை 11 மணிக்கு சென்னையில் டாக்டர் குருசாமி முதலியார் அவர்களது இல்லத்தில் திருமணம் நடந்தேறியது. அத்திருமணமானது இதுவரையில் சென்னையில் நடந்த அனேக பிரபல விவாகங்களில் இதுவும் ஒன்று என்று சொல்லத் தக்கமுறையில் நடந்தது. அலங்காரமான பெரிய தொரு கொட்டகை போடப் பட்டிருந்ததுடன். திருமண மணவறை என்பது விசேஷமாய் அலங்கரிக்கப் பட்டிருந்தது. திருமணத்திற்கு சென்னை அரசாங்க மந்திரிகளும், பெரிய உத்தியோகஸ்தர்களும் மற்றும் செல்வந்தர்களும், பிரபலஸ்தர்களுமாகிய உள்ளூர் பிரமுகர்கள் யாவரும் விஜயம் செய்திருந்தார்கள் என்றாலும், வெளியூர்களில் இருந்து விஜயம் செய்திருந்தவர்கள் உள்ளூர் கூட்டத்தை விட அதிகமாய் வந்திருந்தார்கள் என்றே சொல்ல வேண்டும். கோயமுத்தூர் ஜில்லாவில் இருந்து மாத்திரம் சுமார் 500 பேர்கள் வரை விஜயம் செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

மற்றும் சேலம், திருச்சி, தஞ்சை முதலிய ஜில்லாக்களில் இருந்தும் பலர் விஜயம் செய்திருந்தார்கள். திருமணம் நடந்த உடன் மணமக்களுக்கு பல நண்பர்களால் சன்மானம் வழங்கப பட்டதானது இதுவரை விசேஷமாய் எங்கும் நடந்திராது என்றேசொல்லலாம். பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெருமானமுள்ள வைர அட்டிகை முதல், அதிசயமாக தங்கத்திலும், வெள்ளியிலும் செய்த நகைகளும், பாத்திரங்களும், சாமான்களும மற்றும்பல வித சாமான்களுமாய்சுமார் 20, 30 ஆயிர ரூ.பெருமபடியான அளவு சன்மானம் வழங்கப் பட்டது. இவ்வளவு வெகுமானங்கள் வேறு எங்கும் வழங்கப் பட்டிருக்காது என்றேசொல்லலாம். திருமணமானது பார்ப்பனப புரோகிதரை வைத்து நடத்தப் பட்டது. ஆனால் ஒரே நாளில் முடிவு பெற்றது குறிப்பிடத்தக்கதென ஒரு நிருவர் எழுதுகிறார்.

### சென்னை சுயமரியாதை 2-வது மகாநாடு.

ஷை மகாநாட்டை 5-3-33 தேதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இதன் வரவேற்புக் கமிட்டிக்கூட்டம் 19-2-33ந்தேதியில் தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் இல்லத்தில் நடைபெறுமென சென்னையிலிருந்து எஸ். வி. லிங்கம் எழுதுகிறார்.

## மாமாங்கத்தில் பார்ப்பன கும்மாளம்.

—:0:—

கும்பகோண மாமாங்கம்பார்ப்பனர்கள் புரட்டு என்றும், அவர்களது விளம்பரங்களுக்கும் ஒரு மாக்கும், லாபத்துக்கும் ஆதாரம் என்றும் நாம் சொன்னோம். இப்போது அது சரியா? இல்லையா? பாருங்கள். "தோழர்கள் ... ரங்கசாமி ஐயங்கார் பொருட்காட்சியை திறந்தார். சி. ஆர். சீனிவாசய்யங்கார் சங்கீத மகாநாட்டைத் திறந்தார், விசாரணை பாடினார். முத்தையா பாகவதர் கதை செய்தார். டி. வி. கல்யாணராம சாஸ்திரிகள் வரவேற்பு தலைவர். ராமசாமி அய்யர், டைகர் வரதாச்சாரியார், கணபதி சாஸ்திரி, அலமேலு ஜெயராமய்யர், ஈற்றும் குமாரய்யர், சுப்பையர், ராமசாமி சாஸ்திரி, ரங்காச்சாரி, சுந்தர கனபாடி, சிங்கார கனபாடி, ஆச்சாரிய ஸ்வாமிகள் என்றவர்கள் பார்ப்பனர்களே எங்கும் தோன்றுவதும் எதோ இரண்டொரு பார்ப்பனரல்லா முண்டங்கள் இவர்களுக்கு வால்பிடிப்பதுமாய் இருப்பதை அவர்களது (பார்ப்பனர்களது) பத்திரிகைகளிலேயே காணலாம். ஆகவே மாமாங்கம் பார்ப்பனர் சூட்சி என்றும், அவர்களது வாழ்வுக்கே ஏற்பட்டதென்றும் சொல்லுவதில் என்ன பிழை இருக்கிறது. இதை பார்ப்பனரல்லாத சோணகிரிகள் உணர வேண்டாமா?

———

### துடுப்பதி, செங்குந்த வாலிப சன்மார்க்க சங்கம். 4-வது ஆண்டு நிறைவுவிழா அழைப்பு.

24-2-33ந்தேதி வெள்ளிக்கிழமை ஷை சங்கத்தின் 4-வது ஆண்டுவிழா சென்னிமலை, பிரபல பஞ்சு, நூல்வர்த்தகரும் சமூக சீர்திருத்தக்காரருமான தோழர் எஸ். கே. இராமசாமி முதலியார்அவர்கள்தலைமையில் நடைபெறும். அவ்வமயம் பல அன்பர்கள் பேசுவார்கள் அன்றிரவு ஒரு நாடகம் நடைபெறுமென காரியதரிசி எழுதுகிறார்.

### தஞ்சைஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு. கூட்ட ஏற்பாடு.

15—2—33ந் தேதி மாலை 6 மணிக்கு சங்க மெத்தைக் கட்டிடத்தில் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் சுயமரியாதைத் தோழர்கள் கூட்ட மொன்று கூடியது. கூட்டத்திற்கு வெளியூர் தோழர்களும், நாகை சுயமரியாதைச் சங்க அங்கத்தினர்களும் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது.

அக்கூட்டத்தின் பெரும்பாலோர் நாகை தாலூக்கா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டை மாற்றி தஞ்சை ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க நாகையில் தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டை நடத்துவதென தீர்மானிக்கப் பட்டது.

மேலும் மகாநாடு சம்பந்தமாக முன்னேற்பாடான வேலைகள் செய்வதற்கு தோழர்கள்ஆர். வி. கோபால், எஸ். பி. கிருஷ்ணன், கே. முருகேசன் இவர்கள் ஆர்கனைசிங் கமிட்டி மெம்பர்களாக கூட்டத்தில் தேர்ந்தெடுத்தார்கள்.

மகாநாடு சம்பந்தமாக பல தோழர்கள் விரிவாக பேசிய பின் கூட்டம் இரவு 10 மணிக்கு முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

———

## சேலத்தில் சுயமரியாதைப் பிரசாரம்.

———

19-2-33ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கட்கும், புதுக்கோட்டை தோழர் கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்கட்கும், இவ்வூர் சுயமரியாதைச்சங்கத்தாரால் செவ்வாய்ப்பேட்டை மநர்குல தேவாங்க பள்ளிக்கூடத்தில் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்படும். அதுசமயம் சேலம் தாலூகா போர்டு பிரசிடெண்டு தோழர் ராவ்சாஹிப் எஸ். பி. ராஜமாணிக்கம் அவர்கள் தலைமை வகிப்பார்.

அன்று மாலை 5-மணிக்கு சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடும். என ஷை சங்கத்தார் எழுதுகிறார்.

———

### அறிக்கை நே 1. தஞ்சைஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு நாகப்பட்டிணம்.

———

தஞ்சைஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டை நாகையில் நடத்துவதற்கான தீவிர முயற்சிகள் நடந்து வருகின்றன. மகாநாட்டுத் தலைவர், திறப்பாளர் முதலியவர்களை தேர்ந்தெடுப்பதற்கும், ஜில்லாவிலுள்ள சுயமரியாதைச்சங்கத்தார் அபிப்பிராயத்தையும், தோழர்கள் அபிப்பிராயத்தையும் தெரிந்து முடிவு செய்யவேண்டியிருப்பதால் 26-2-33-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு நாகை சுயமரியாதைச் சங்கமெத்தைக் கட்டிடத்தில் நடக்கும் ஆலோசனைக்கூட்டத்திற்கு தஞ்சை ஜில்லாவிலுள்ள சுயமரியாதைத் தோழர்கற் அனைவரும் கலந்து அவரவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க கேட்டுக்கொள்கிறோம். கூட்டத்திற்கு வரமுடியாத தோழர்கள் அவர்களது அபிப்பிராயத்தை கடிதமூலம் தெரிவிக்கபடி வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
கே. முருகையன்,
ஆர். வி. கோபால்,
எஸ். பி. கிருஷ்ணன்.
முயற்சியாளர்கள்.

———

### ஆர். கே. ஷண்முகம்.

இந்திய சட்டசபை உபதலைவர் தோழர் ஆர்.கே. ஷண்முகம் பி.ஏ.பி. எல். எம். எல். ஏ. அவர்கள் இம்மாதம் 17ந்தேதி டில்லியிலிருந்து பம்பாய் வருகிறார். அங்கிருந்து கோவைக்கு வருவார் கோவையிலிருந்து மார்ச்சு 2ந்தேதி மறுபடியும் டில்லிக்குத் திரும்புவார்.

## நோட்டீஸ்.

———

ஈரோடு தாலூக்கா கறண்டிபாளையம கிராமம் கெட்டச் செல்லா பாளையத்திலிருக்கும் சென்னிமலைக்கவுண்டன் மைனர் மக்கள் சின்னப்பன் 1 சென்னியப்பன் 2 இவர்களுக்கு கார்டியன் தாயார் அங்கம்மாள் ஆகிய நான் இதனால் தான் சகலருக்கும் தெரிவிப்பதென்னவென்றால்:—

ஷை மைனர்களின் தகப்பன் சென்னிமலைக் கவுண்டனும் தமையன் கருப்பணசாமிக் கவுண்டனும் மைனர்களை மோசம்செய்து குடும்பச் சொத்தில் மைனர்கள் பங்கையும் சேர்த்துப் பராதீனம் செய்யப் பிரயத்தனம் செய்வதாகத் தெரிவதால் அவர்கள் செய்யும் எவ்வித பராதீனமும் மைனர்களையும் மைனர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் எவ்விதத்திலும் கட்டுப் படுத்தாது என்ற விபரம் இதனால் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

ஈரோடு 17-2-33 } (ஒப்பம்) அங்கம்மாள்

## "For Sale (விற்பனை")

A bungalow with a small garden opposite to Egmore Railway Station Madras. Price Rs. 35,000/- For particulars apply to undersigned.

எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் எதிரில் பங்களாவும் தோட்டமும் விற்பனைக்கு விலைரூ. 35000 விபரம் கீழ் கையொப்பமிட்டவரிடம் அறியலாம்.

E. N. தணிகாசல முதலியார்,
அட்வகேட்
412 திருவல்லிக்கேணிஹைரோட்
சென்னை.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இது தான். சோவியட் முறையென்று வழங்கும் இதனுடைய யதார்த்தம் என்னவெனில், எந்தெந்தத் தொழிலை எவன் புரிகின்றானோ, எந்தெந்த நிலத்தை எவன் உழுது பயிரிடுகின்றானோ அவன்தான் அவனுடைய ஆட்சியை நடத்தல் வேண்டும். அந்த அரசியலுக்கு அவனே உரியவன், மற்றவர்கள் யாருக்கும் எவ்வித ஆதிக்கமும் கொடுக்கலாகாது. இந்த இரண்டு தான் இந்த சோவியட் திட்டத்தில் முக்கியமான லட்சணங்கள். இந்த சோவியட் முறையில் கிராம வாசி முதல் நகர வாசி வரையில் நேராக அரசியலை நடாத்த உரிமை பெறுகின்றான். இந்த ஒரு முறையில் தான் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் உண்மையான ஆற்றல் கிடைக்கும். அவனவன் தொழிலையும் அதன் பயனையும் அவனே அனுபவிக்க நிச்சயமுண்டாகின்றது. அந்தந்த கிராமத்திலாகிலும், தாலூகா ஜில்லாக்களிலாகிலும் வசிக்கும் தொழிலாளிக்கும்விவசாயிக்கும்அவனவனே, தான்வாழும் கிராம, தாலூகா ஜில்லாக்களுக்கு வேண்டிய வசதிகளை உண்டாக்கிகொள்ள சக்தி பெறுகின்றான். இந்த சோவியத் திட்டத்தில் தான் ஒவ்வொரு தொழிலாளியும் ஒவ்வொரு விவசாயியும் தனக்கு மேலாகவுள்ள தாலூக்கா, ஜில்லா நிர்வாகங்களில் பாத்யதை அடைகின்றான். இதே மாதிரியாகவே மாகாணத்திலும் மத்திய அரசாங்கத்திலும் விவசாயியும் தொழிலாளியும் நேராக நிர்வாகத்தில் பாத்தியதையைப் பெறுகின்றான். இவ்வித ஏற்பாட்டினால் சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை அவர்கள் பெயரால் ஆட்சி புரிய முடியாது. இந்தத் திட்டத்தினால் சிறுபான்மையோர் பெரும்பான்மையோருடைய உழைப்பின் பயனை ஏறக்குறைய முற்றிலும் எடுத்துக்கொள்ள முடியாது இந்த முறையில் தான் ஒவ்வொருவனுடைய உழைப்பின் முழுப்பயன் அவனவனுக்கே சேரும்; இந்தத்திட்டத்தில் தான் ஒவ்வொருவனும் உழைத்தே தீரவேணுமென்ற ஞாயம் கிடைக்கும். அரசனும் அமைச்சனும், வண்ணானும், தோட்டியும் மற்ற எவ்விதத் தொழிலாளியும் தத்தம் உழைப்பின் முழுப் பயனை அனுபவிக்க ஆதிக்கமுண்டு. உலகில் நடைபெறும் வஞ்சனையும், மோசமும்(Exploitation) அடியோடு அற்றே போகும்.

ஆதலின் சுயமரியாதைக்காரர்களாகிய நாம், டிமாக்கிரஸி என்ற மோசத்தை இனியும் கையாளுவதா அல்லது சோவியட் முறை யென்ற உண்மையான திட்டத்தைக் கையாளுவதா?

நாம் நம் சுயமரியாதை நிர்வாகத் திட்டத்தை உண்மையாக்கிக் கொள்ள கடமைப் பட்டுள்ளோம். நமது நிர்வாகத்திட்டத்தில் மோசடிகளான ஜனநாயகம், ஜனநாயகப் பிரதிநிதித்வம்(PeoplesRepresentives) தேர்தல் (Election) வாக்குரிமை (Votes) முதலிய சொற்களை உபயோகிக்க முயல்வதில் யாதும் பிரயோஜனமில்லை யென்றே இதனை யோசித்துப் பார்ப்பவர்கட்கு நன்கு விளங்கும். பழமையான வார்த்தைகளைக் கொண்டு இனி நாம் ஏமாற்றுவது கூடாது. பழம் பெயரைப்புதுப் பெயரிட்டழைத்தாலும் அதற்கு இயற்கையாயுள்ள நாற்றம் அதனை விட்டுப் போகவே போகாது. நமது நாட்டுத் துக்கம் போக வேண்டுமானால் அந்தத் துக்கத்துக்கு ஆதாரமாயுள்ளவைகளை நமது திட்டம் போக்கக் கூடியதாயிருக்க வேண்டும். அவன் தம்பி அங்குதன் என்று வழங்குவது போல கமது திட்டம் மற்றத் திட்டங்களைப் போல் பாசாங்கு செய்தல் கூடாது. பகுத்தறிவுக்கும் அனுபவத்துக்கும் ஒத்திருக்கும் அரசியல் திட்டம் ஒன்றேயுளது. அது தான் நலம் இது வரையிலும் கூறி வந்த (Soviet system) சோவியட் திட்டமாகும், இதனை எவ்விதமாக அரசியல் அமைதிக்கும் ஒழுங்குக்கும்பொருத்தமாக ஏற்படுத்தலாம் என்பதை நமது சுயமரியாதைத் தோழர்களின் யோசனைக்கு விடுகிறோம்.

## திட்டம்.

1. நமது தமிழ்நாட்டை முழுதும் ஓர் மாகாணமாக வைத்துக் கொள்வோம். வேறுமாகாணம் சேருகின்ற வரையிலும் அல்லது இந்தத் திட்டத்திற்கு உட்படுகின்ற வரையிலும் ஒரே மாகாணமாக வைத்துக் கொள்வோம்.

2. இந்த மாகாணத்தை பரிபாலன விஷயங்களுக்காக ஜில்லா, தாலூக்கா, கிராமம் என்று மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளப் படும்.

3. நமது தமிழ் நாட்டிலுள்ள மத ஆசாரம் முதலியமூட நம்பிக்கையைப் போக்குதல், யாவருக்கும் சம உரிமையைப் பெறச் செய்தல், சுத்தம், சுகாதாரம், கல்வி முதலியவற்றை அபிவிருத்தி செய்தல், பிரிட்டிஷ் அரசியலில் ஏற்பட்டிருக்கும் ஸ்தல ஸ்தாபனங்களாகிய, யூனியன்போர்டு முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, சட்ட சபைகளைக் கைப் பற்றுதல் முதலிய வேலைகள் நமது முக்கிய கோரிக்கைகள் ஆகும்.

4. இந்த வேலைகளை கிரமமாகச் செய்து வர முதலில் 5000 பேர் வசித்து வரும் ஒரு கிராமத்தையோ அல்லது இரண்டு மூன்று கிராமங்களையோ சேர்த்து பரிபாலன ஆரம்ப இட (Unit of administration) மாகச் செய்யப் படும்.

5. இந்த கிராம பரிபாலன இடத்திற்கு சுயமரியாதைத் திட்டத்தை ஒத்துக் கொள்ளும் அங்கத்தினர்கள் தான் உரியவராவர்.

6. இந்த கிராமத்தை நிர்வகிக்க ஓர் நிர்வாகக் கமிட்டி இருக்க வேண்டும்.

இந்த நிர்வாகக் கமிட்டியாரை அந்தக் கிராம சுயமரியாதை அங்கத்தினரே தேர்தல் செய்ய வேண்டும். இந்த கிராம சுயமரியாதை அங்கத்தினர்கள் யாராயிருக்க வேண்டுமென்றால் தனது தேகததால் உழைத்து சீவிக்கின்றவர்களாகிய தச்சன், கருமான், தட்டான், கொத்தன், மில்களில், ரயில்களில் வேலை செய்பவன், ஆலையில் வேலை செய்பவன், நெசவுத்தொழில் செய்பவன், குயவன், வண்ணான், அம்பட்டன், மருத்துவன், விவசாயி, வண்டியோட்டி, ரிக்ஷா ஓட்டி, மோட்டார் ஓட்டி, டிராம் வண்டி ஓட்டி, கப்பல் ஓட்டி, தந்தித்தபால் சேவகன், தோட்டி, சக்கிலி, விளக்கேற்றுபவன், சித்திர வேலை செய்பவன், கல்தச்சன், வர்ணக்காரன், உபாத்தியாயர் முதலிய இவர்கள் தான் கிராம சோவியத்தில் சேர உரிமையுண்டு. இவர்களுக்குத்தான் தேர்தலுக்கும் வாக்குரிமையுண்டு. இவர்களுக்குத்தான் நிர்வாகப்பதவியைப் பெறவும் அதிகாரம் உண்டு.

கஷ்டமில்லாத இதரத்தொழில் புரிபவர்களாகிய நிலச்சொந்தக்காரர்கள், வீடு சொந்தக்காரர்கள், பணக்காரர்கள், வியாபாரிகள், தொழிற்சாலை சொந்தக்காரர்கள், பாங்கர்கள், வட்டிக்குப் பணம் கொடுப்போர் லேவாதேவிக்காரர் முதலியவர்கள் இந்த சோவியத் திட்டத்தில் இடம் பெறமாட்டார்கள்.

இந்த கிராமத்துக்குரிய முக்கிய வேலைகள் என்னவெனில், கிராமபஞ்சாயத்துக்கும், தாலூகா, ஜில்லா சபைகளுக்கும் நமது சமதர்மத்திட்டத்தை ஒத்துக்கொண்டு அதனைக் காரியாம்சத்தில் கொண்டு வருவதாக உறுதியளிக்கும் சமதர்ம அபேட்சகரை (Socialist Candidates) நிறுத்துதலாகும். மற்ற சுயமரியாதை கோக்கங்களைப் பரப்புதலும் அவசியமாகும். இதே மாதிரியாகவே ஒவ்வொரு தாலூகாவிலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் சுயமரியாதை அங்கத்தினர்களைக் கூட்டி நிர்வாகக் கமிட்டி ஏற்படுத்தவேண்டும். இதே மாதிரியாகவே மாகாணசபை யொன்றையும் சேர்த்து மாகாண நிர்வாகக் கமிட்டி வருஷத்திற்கு இரண்டு முறையோ மூன்று முறையோ அந்தந்த முக்கிய இடங்களில் கூடலாம். இந்த மாகாணக் கமிட்டியின் அங்கத்தினர்கள் 300 பேர்க்கு மேற்படக் கூடாது.

இந்த அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையாவது, சோவியட் கிராம அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கும் சிலர், சோவியட் தாலூகா அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கப் படும் சிலர், சோவியட் ஜில்லா அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சிலர் இம்மூன்று பரிபாலன இடங்களிலிருந்து அனுப்பப்படவேண்டும்.

கிராம சோவியத்தார் அவர்கள் கிராமத்துக்கு வேண்டிய வசதிகளை முதலில் தாங்களே தேடிக்கொள்ள வேண்டியது. அதற்கு மேல் உதவி வேண்டுமானால் தங்களுக்கடுத்த, தாலூகா, ஜில்லா மாகாண சோவியத்தின் மூலமாகப்பெற்றுக்கொள்ளலாம். அதே மாதிரியாகவே தாலூகா, ஜில்லா, மாகாண சோவியத்துகளும் ஒன்றுக்கொன்று உதவி பெறக்கூடும். கிராம, தாலூகா, ஜில்லா, மாகாண சோவியட்கள் தங்கள் அங்கத்தினர்களிடமிருந்து சக்தியுள்ளவாறு சந்தா வசூலித்து தங்களுடைய நிர்வாகத்தை நடததிக்கொள்ள வேண்டும்.

மாகாண சோவியத்துக்கு நிர்வாகத்துக்கு வேண்டிய செலவுகளுக்கு ஒரு ஸ்பெஷல் பண்டை (Special Fund) பொருளுடையவர்களாகிய நமது சங்க அபிமானிகளிடமிருந்தும் சுயமரியாதை அங்கத்தினர்களிடமிருந்தும் 1 லட்ச ரூபாய்க்குக் குறையாமல் ஒரு நிதியை வசூலிக்க முயற்சிக்க வேண்டும்.

மேற்கண்ட சோவியத் நிர்மாண சட்ட திட்டங்களை நடைபெறும் முதலாளி சமூகத்தில் கண்டிப்பாக அனுஷ்டிக்க முடியாததலால், அந்தந்த சந்தர்ப்பத்துக்கு ஒத்தவாறு நமது முக்கிய சோவியட் தத்துவத்திற்கு விரோதமாகாமல் விட்டுக்கொடுத்தும், இழுத்துப்பிடித்தும் நடைமுறையில் அனுஷ்டிக்கவேண்டும். திருஷ்டாந்தமாக நமது மாகாணத்தில் சோவியட் திட்டத்தில் ஞானம் பெற்றோரும் அதனை நிர்வகித்துக் கொண்டுவரும் சக்தியுள்ளோரும், அவர்களில் சிலர் பொருள், நிலம், வீடு, சொத்துக்கள் படைத்துள்ளவராயிருப்பதால் சமதர்மத்திட்டத்தை சமதர்ம அரசியலில் அனுஷ்டிக்கவும் அதற்குப் பாடுபடவும் சம்மதிப்பவர்களை அதீதப்பட்ட முதலாளிகளென்று அவர்களை வகுத்து நமது இயக்கத்தில் நிர்வாகத்தை நடத்தவும் விடலாம். இந்த முக்கிய விஷயங்களெல்லாம் மாகாணக்கமிட்டிகளில் யோசித்துத் தீர்மானித்தல் வேண்டும். நாளடைவிலும் மேற்படி திட்டங்களைக் கூட்டியும் குறைத்தும் செய்யலாம்.

---

## சென்னையில் சுயமரியாதைக்கூட்டம்.

---

26-2-33 ந்தேதி ஞாயிறன்று மாலை 5 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் தோழர்கள் வி. பி. எஸ். மணியர், சங்காதரன், கே. வி. அழகர்சாமி, நாஸ்திக குப்புசாமி, கல்யாணசுந்தரம், பாலசுப்பிரமணியம், ஜீவானந்தம், அ. பொன்னம்பலம் முதலியவர்கள் பேசுவார்கள்.

# 'பொதுவுடமை பொறை'

(தோழர். எ. பி. பழனியப்பா)

தோழர்களே!

இன்றைய உலகம் எதை நாடுகிறது? பொதுவுடமையின் உறுப்புகளாகிய, ஒழுக்கம், அறிவு, அன்பு, இன்பம், இவற்றையே நாடிச் செல்கின்றது. இவற்றில் ஒன்று குறைபடினும் குவலயம் செல்லாது. மேற்கூறிய கூறுகள் ஒவ்வொரு தனி மனிதனும் உட்கொள்ள வேண்டிய உயரிய உறுப்புக்களாகும். பொதுவுடமை என்றால் இன்னும் யாருக்கும் பயமாகவே இருந்து வருகிறது. எனது தோழர் ஒருவர் சிறிது நாள் முன், நமது 'குடியரசு'த் தலைவரது தலையங்கமும், தலைவரது பேச்சும் தற்காலே, பயத்தை(அபாயத்தை) தரத்தக்கதாய் இருக்கின்றது எனக் கூறினர். இத்தகைய இளைஞருக்கே இவ்வாறானல் முதியோரைப்பற்றி மொழிவானேன். நமது தலைவர்தம் பேச்சிலோ, எழுத்திலோ யாரும் கவலை கொள்ளவேண்டாம். சரியா தப்பா என்று ஆய்ந்து ஆனை செய்யுங்கள் என்றே நான் கூறுகிறேன். [illegible] உயிர் உடலைப் பற்ற கூட நமக்குக் கவலை வேண்டாம். வருவது வந்தே தீரும். அதற்கு சமதர்மிகளாகிய ஒவ்வொருவரது உயிரும், உடலும், உணர்ச்சியும் புரட்சியையே நாட வேண்டும். புரட்சி என்பது நமது நாட்டிற்கு மட்டும் பூச்சாண்டியாயத் தோன்றலானேன்? மாறுதல் வேண்டாத மனிதனும், நாடும் இது காலை உண்டா? எத்தகைய எதிர்ப்பும் இனியும் வந்தே தீரும். கோழைகள் இன்றே வெளியேறட்டும், பொதுவுடமைப் பொறையே உலகை ஆள வல்லது. அப்பொறையை [illegible] கொண்டு எதிர்க்கவேண்டும். இன்று இவ்வுலகில் சிறந்த ருஷ்யாவிலே ஒழுக்கம் உயிரினும் பெரிதாக ஓம்பப்பட்டு வருகிறது. இவ்வறிஞர் பர்னாட்ஷா அவர்கள், நேரில் கண்ட அனுபவ உண்மையாக உலகிற்கு சின்னாட்களுக்கு முன் எடுத்தோதினர். சுயமரியாதைக்கும், சமதர்மத்திற்கும் ஒழுக்கமே உண்மை உயர் அறம். ஒழுக்கம் இன்றேல் இழுக்கே. ஆதலான், தோழர்களே! ஒழுக்கத்தை உயிரினும்பெரிதாக ஓம்புங்கள்! நமது பொறையானது, எப்போதும், ஒழுக்கம், உண்மை, உழைப்பு, இவற்றையே அடிப்படையாகக் கொண்டது. இதனால், அறிவு, அன்பு, இன்பம் இவற்றை எளிதில் பெறலாம். "அன்பே சிவம்" என்ற சைவம், இன்று வம்பர் மதமாக மறைந்து வருகிறது. பௌத்தம், கிறிஸ்துவம் போன்ற ஏனைய மதங்களும் இக்கதியே யெய்தியது. ஆனால், நமது பொதுவுடமை அன்போ, உலகம் முற்று ஒளிவிட வேண்டும். அவ்வன்பிற்கு ஒழுக்கமே முதன்மை. அவ்வொழுக்கம், அறிவான அன்பைத்தேடியணையும். அன்பே இன்பத்தோடிணையும். இவைகள் ஒன்றோடொன்று இணைந்து, இனிய உலகப்பொதுவுடமையாம் புத்தன்மைப்பெற்றேதீரும்.

### நமது கடமை.

தோழர்களே! தற்போது நமது கடமை கடலினும் பெரிதாகத்தோன்றும். அது கண்டு கலக்கம் வேண்டாம். இதற்குச் சமதர்மத்தோழர்களின் பேராதரவும் ஒத்துழைப்பும் வேண்டும். கிறிஸ்துமதம் நாட்டில் செல்வாக்குப் பெற்றதற்கு அவர்களது புதுமாதிரியான உழைப்பே பெருங்காரணமாகும். அது போல் நாமும் நமது கடமை உணர்ந்து செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு ஊரிலும், கிராமத்திலும் சமதர்ம வெடியை வெடிக்கவேண்டும் ஒவ்வொரு ஊரிலும் சங்கம் நிறுவவேண்டும் மாதந்தவறாது, வாரந்தவறாது, கட்டுப்பாடாக நமது வேலையைத் துவக்கவேண்டும். நமது சமதர்மத் திட்டங்களை திடமாக எடுத்துக் கூறவேண்டும். நமது வேலை முற்றும், ஏழைகளிடத்தும், பறச்சேரிகளிடத்தும் தான் பறந்து கிடக்கின்றது. சேரி சென்று சேவை புரியவேண்டும். ஆங்காங்கு நமக்கென பல கட்டிடங்கள் நிறுவவேண்டும். இயன்ற பொருளுதவியை இக்கால நிலையில் ஏற்றே தீரவேண்டும். சிறு தொகையால், அரிய, பல பெரிய வேலைகளைச் சாதிக்கவேண்டும். இது காலை தேசியம் செத்து வருகிறது. மதாபிமான—தேசாபிமானப் புட்டை பாரறியச் செய்யத் தொண்டாற்றுங்கள். மனுஷாபிமானத்தை மக்களுக்கு ஊட்டுங்கள். தெய்வாபிமானத்தைச் சிதையுங்கள். நாட்டின் வறுமையை, எளிமையை பணக்காரர்களின் பால் சென்று கூவுங்கள்! அவர்கள் மனத்தில் பொதுவுடமைப் பொறையைப் புகுத்துங்கள்! இதோடு நமதுகடமையும், வேலையும் நின்று விடவில்லை. சமதர்மிகளாகிய ஒவ்வொருவரும் தங்களாலியன்ற பொதுவுடமை அறத்தைப் பேணுங்கள். தங்கள் அநுபவப்பாட்டையை அகலச் செய்யுங்கள்.

இன்னும் கிராம சுகாதாரத்திலும் நமது கவனம் செலுத்தப்படவேண்டும். நீர்நிலை, கால்வாய், ஆறு நீர்த்தாரை முதலிய வற்றைத் தூய்மைப் படுத்துங்கள்! ஊர்ப்புறமுள்ள குப்பை கூளங்களை அகற்றுங்கள்! வாரம் ஒரு முறை உங்களது சமதர்ம அன்பு உரையை ஒரு பத்து பேருக்காவது போதியுங்கள்! குடியரசைக் குவலயமெல்லாம் பரப்புங்கள்! குவலயமெலாம் களிகூற பொதுவுடமைக்கூத்தாடுங்கள்! சமதர்ம முரசை ஒலிக்கச் செய்யுங்கள்! சமதர்மச சுயமரியாதை நாடகவியலால் நாட்டைப்பண்படுத்துங்கள்! இளஞ் சிறுவர்கட்கு நமது பொதுவுடமையறங்களாம், ஒழுக்கம், அன்பு, அறிவு, ஊக்கம், உழைப்பு முதலிய உண்மைகளை எடுத்துக்காட்டுங்கள்! உங்கள் உரிமைத் தோழர்களை, சமதர்ம வெளியீடுகளுக்கு உதவிபுரிய வேண்டுங்கள்! அன்றுதான் நமது நாடு பொதுவுடமைப் பொறைப்போருக்குத் தகுதியுடையதாகும்.

# பலி பீடம்.

(ஜய—ராமமூர்த்திக்கிணையானவர் என்ற மெட்டு)

(பாரதிதாஸன்)

மத—ஓடத்திலேறிய மாந்தரே பலி
பீடத்திலே சாய்கிறீரே!

[1] பாடுபட்டோர்கள் பருக்கையில்லா தொரு
பட்டியில் மாடெனவாழ்கின்றீர் — மதக்
கேடர்கள் காலினில் வீழ்கின்றீர் — ஒண்ட
வீடுமில்லாமலே தாழ்கின்றீர். (மத)

[2] பாதிக்குதே பசி என்றுரைத்தால், செய்த
பாபத்தைக் காரணம் காட்டுவார் — மத
வாதத்தை உம்மிடம் நீட்டுவார் — பதில்
ஓதி நின்றால் படை கூட்டுவார். (மத)

[3] வாதனை சொல்லி வணங்கி நின்றால் தெய்வ
சோதனை என்றவர் சொல்லுவார் — பணச்
சாதனையால் உண்மை வெல்லுவார் — கெட்ட
போதனையால் தினம் கொல்லுவார். (மத)

[4] பேதிக்கும் நோய்க்கும் பெரும்பசிக்கும் பல
பிணிக்கும் வாய்திறப்பீர்களோ! — இச்
சாதியென்றால் எதிர்ப்பீர்களோ? — செல்வர்
விதியைத் தான் மதிப்பீர்களோ? (மத)

[5] கூடித் தவிக்கும் குழந்தை மனைவியர்
கூழை நினைத்திடும் போதிலே — கோயில்
[illegible] தெரு மீதிலே — [illegible]
[illegible] எற்பீரோ காலிலே. (மத)

[6] தொட்டலும் வேலை [illegible]
தொந்தி சுமக்கும்பு ரோகிதர் — இட்ட
சட்டப்படிக்கு நீரோ பலர் — அவர்
அட்டகாசத்துக்கே [illegible]? (மத)

[7] மூடத்தனத்தை முடிக்கும் மதத்தை நிர்
மூலப்படுத்தக் கை ஓங்குவீர் — பலி
பீடத்தை விட்டுவெளி நீங்குவீர் — செல்வ
நாடு நமக்கென்று வாங்குவீர்.

—:0:—

### காஞ்சீபுரம்.

### விவசாய தொழிலாளர் பொதுக்கூட்டம்.

6-2-33ந்தேதி மாலை 6-30மணிக்கு ஆடிசன்பேட்டை ஜவுளிக்கடை சத்திரத்தில் தக்கோலம் தோழர் செல்லப்பன் அவர்கள் தலைமையில் சென்னை தோழர் எம். சிங்காரவேலு பி.ஏ.பி.எல். அவர்கள் செய்யாறுதாலூக்கா 106-நெ. மாமண்டூர் கிராமத்தில் விவசாய தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருப்பதை ஆதரித்து தொழிலாளிகளுக்கு காஞ்சிவியாபாரிகள் பொருளுதவி செய்து ஆதரிக்க வேண்டுமென்று பேசினார்கள். பிறகு தலைவர்கள் கீழ்கண்ட தீர்மானம் கொண்டு வந்தார்.

"செய்யாறுதாலூக்கா 106நெ.மாமண்டூர் கிராமத்திலிருக்கும் விவசாய தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் வாரவிஷயத்தில் தகரார் ஏற்பட்டிருப்பதால் தொழிலாளிகள்சுமார் 27-தினங்களாக வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். வேலை நிறுத்தத்தைமுன்னிட்டு தொழிலாளிகளுக்கு மிகவும் பசிஅதிகரித்திருக்கிறபடியால் காஞ்சி வியாபாரிகள் பொருளுதவி செய்து விவசாய தொழிலாளிகளை ஆதரிக்க வேண்டுமென்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது" இதை நாஸ்திகன் தோழர் சி. கே. குப்புசாமி அவர்கள் ஆதரித்து பேசியதும் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

# ஏழைகளே விழியுங்கள்.

(நாகை ஜி. எஸ். வாசன்)

நந்தமிழ் நாட்டின் கண் இவ்வேழைக்கு இந்த சந்தர்ப்பத்தில் எழுத தூண்டியது எது? என்று அறிவுக்கு வேலையைக் கொடுத்து விஷயத்தை அலசிப்பதிகாரம் செய்யவேண்டியதுதான் ஆறறிவு படைத்த மனிதனின் முதற் கடமையாகும். அதைவிடுத்து எதோ பேப்பரைப்படித்தோம். ஏழைகள் பாடு ரம்பவும் கஷ்டந்தான். ஏழை பணக்காரனென்ற பாகுபாடு ஒழிந்தால் தான் நாட்டிற்கு விடுதலை'' என்று வீணைவியாக்யானங்கள் பேசியும், சமய சஞ்சீவியாக வாய் வேதாந்தம் படித்து பரிதாபப்படுவதும் அறிவுடமையாகாது. ஒருவன் பேசுவதினின்றும் நடித்துக் காண்பிப்பதே சாலச்சிறந்தது. அது தான் மானுஷீகமும், அறிவுடமையுமாகும். மனிதனுகப்பிறந்த ஒவ்வொருவனும் அவனவன் கடமையைச்செய்தானு என்பதுதான் நமது வினவாகும்.

சுயமரியாதை இயக்கம் சொல்லுவது என்ன? உலகத்தின் மக்கள் யாவரும் சமம். அவற்றுள் மேல் ஜாதி, கீழ்ஜாதி, பணக்காரன்-ஏழை, முதலாளி-கூலிக்காரன் என்பவைகளில் பாகுபாடுகள் ஒழிந்தே தீரவேண்டும் என்கின்ற மனித வர்க்கத்திற்கு ஜீவாதாரமான உரிமைகளாகிய நல்ல உணவு, சுத்தமான— உடை, சுகாதாரமான இடம முதலியவைகள் யாவருக்குமசமமான— அவசியமாகிய விஷயங்கள்.

இயற்கை நியதிக்கு எவன் பங்கம் விளைவிக்கக் கூடியவனென்று ஏற்படுகின்றானோ அவன் விசாரணை வேண்டாத குற்றவாளியாகிறுன். குற்றவாளியைதண்டிக்கவோ, கண்டிக்கவோ செய்யவேண்டியதுபொருப்பு வாய்ந்த சமதர்ம வாதிகளின் கடமையாகும்.

$35\frac{1}{2}$ கோடி மக்களை தாங்கிய இந்தியாவின் கண் பெரும்பான்மையான மக்கள் பசியின் கொடுமையால் அறை வயிற்றுக்கே திண்டாட்டமடைந்து ஊர்ஊராய், தெருத்தெருவாய், சந்துசந்தாய் சுற்றித்திரிந்து கஞ்சிக்குக்கண்ணீர்விட்டுக்கலங்கி தாளம் போடும் நிலையில் இருக்க ஒரு சில பகற்கொள்ளைக்காரர்கள்— நயவஞ்சக நாணற்கள்— சூழ்ச்சிக்காரர்கள்— சுயநலப்புலிகள்— சோம்பேரிக் கூட்டங்கள் ஆகிய பதவி வேட்டையும், பணவேட்டையும் ஒன்றாய்க்கலந்து உறுப்பெற்றெழுந்த கன்னெஞ்சர்கள் மாத்திரம் சுகாதாரமான தோட்டத்தினடுவில் சலவைக்கற்களால் கட்டப்பெற்ற பங்களாவில், தனது சுகபோகங்களுக்கிடையில், வெல்வெட் சோபாவில், உலகமே இன்னதென்ற உணர்ச்சியற்றவர்களாய் பக்கத்திற்கு ஒரு பாவையுடன் சல்லாபலீலைக்கினிய பாடல்களை அப்பாவையர்கள் பாட இம்மாக்கள் அதற்கிசைந்த தாளம் போட்டிருக்கவும் நீதியோ.

ஏழைமக்களே! என்றுதான் நுங்கள் துயில் கலைந்து நாமும் மனிதர்கள்தான் என்ற உண்மை உணர்ச்சியுடன் வீரிட்டெழப்போகின்றீர்கள். விழியுங்கள்! விழியுங்கள்!! தூங்குகிறவன் தூங்கிக்கொண்டும், விழித்தவன் எந்நாளும் விழித்துக்கொண்டே இருக்கவும் எப்படியும் எந்நாளும் முடியாது என்பதைப்போல் தூங்குவதும், விழிப்பதும், இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஏழை மக்களுக்கு நடக்கவும, பேசவும் கொஞ்சகஞ்சம் கூலி வேலை செய்து அரைவயிற்று கஞ்சிக்கு வழி தேடமட்டுந்தான் தற்பொழுது சக்தியிருக்கிறது. ஏழை மக்களின் இரத்தத்தை எவனவன் அட்டை உருக்கொண்டு திருடினுனே அவனவன் இறுதியாக முதல் வட்டியும் சேர்த்துக்கொடுத்துவிட தயாராக வேண்டியகாலம் நெடுந்தூரத்திலில்லை. ஆகையால் நாம் என்னுளும் மிருகத்தினும் கேடாய் உழைத்தும் நமக்கு போதிய கூலி கிடைக்காமல் நம்முடைய உழைப்பால் கிடைத்த செல்வத்தை ஒருவித உழைப்புமில்லாத எவனே ஒருவன் காரணமின்றிக்கொள்வது ஏன் என்று கொஞ்சம் யோசனை செய்யவேண்டிய காலம்வந்துவிட்டது. நாம் யார்? அவன் யார்? எல்லோரும் ஓரினந்தானே. அவன் மடடில் எல்லோருடைய கண்களிலும் சுக்குப் பொடியைத் தூவி பகிரங்கக் கொள்ளை யடிப்பதற்கு என்ன ஞாயமிருக்கிறது என்று யோசித்துப்பாருங்கள். இது கடவுள் கட்டளை கர்ம வினை யென்பதெல்லாம் சோம்பேரிகளின் கட்டுக்கதை பகுத்தறிவை பாழ்படுத்துவதும் அடிமையாலும் அடிமையாக இருப்பதுவும் முட்டாள் தனமாகும். ஒருவன் அடிமையாக வெளியிலிருப்பதைக் காட்டிலும் காவலிலிருப்பது சாலச்சிறந்ததே.

நமது நாட்டில் பணக்காரத்திட்டம் இருக்கும் வரையில் ஏழைகளின் நிலை என்றும் அடிமையே. இதை மறுப்பவரும் உண்டோ? ஏழைஎன்ற இழி சொல் நீங்க வேண்டுமானுல் ஏழைகளாகிய நீங்கள் அடிமையிலிருந்து நீங்கி சுயமரியாதையுடனும், சுதந்திரமாகவும் சுக வாழ்க்கை நடத்தவும் வேண்டுமானுல் உணர்ச்சி பெற்று இக்ஷணமே உடல் பொருள் ஆவி மூன்றையும் வெறுத்து சமதர்மத் தொண்டு செய்ய வழிபடுங்கள் உண்ண உணவு, உடுத்திக் கொள்ள உடை, இருக்க இடம் படுக்கப் பாயிக்கு வழி தேடுவதே முக்கியம். அதை முற்றிலும் மறந்து சுயராஜியம் என்றும், சுதேசியம் என்றும், ஆலயப் பிரவேசமென்றும் வீண்கலவரமும், கலாட்டாவும் பொய் கூப்பாடும் போட்டு நாட்டை இனியும் குட்டுச்சுவராக்குவதில் யாதொரு பயனும் இல்லை. ஆலயப்பிரவேசம் அம்மம்ம! என்ன கொடுமை, அவர்களின் மனம் தான் கல்லோ, இரும்போ, கற்பாறையோ. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் சட்டத்திற் குட்பட்ட காலத்திலேயே ஏழை இந்தியா சோம்பேரிகளால் தாழ்த்தப் பட்டவர்களுக்கு இக்கதி யென்றால் நாளை வரும் சுயராஜியத்தி (கொம்பு முளைத்தால்)ல் அவர்கள் நிலமை என்னவாகும்? அதோ கதி யென்பதில் ஆட்சேபணையுமுண்டோ? மனிதனுக்கு மனிதன் அடிமைப்படுத்தும் கசடர் நிறைந்த இந்நாட்டில், காங்கிரஸ் திட்டத்தின்படி ஏழை ஏழையாகவும், பணக்காரன் பணக்காரனுகத்தானிருக்க முடியுமே யொழிய வேறில்லை. ஏழை மக்களுக்கு விடுதலை அன்றும் இல்லை, இன்றும் இல்லை, என்றும் இல்லை என்ற முடிவாகத்தானிருக்கின்றது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் பசியால் வாடியிறக்க, ஒரு சிலர் தாங்கள் மட்டில் ராஜபோகத்துடனிருப்பது தான் இனி வரும் காலத்தில் முடியா தென்று நினைக்கின்றேன். (That cock won't fight in the future) என்றைக்கு ஏழைகளுக்கு விடுதலையோ அன்றுளே நன்னுள், அன்றே சமத்துவம், அன்றே சமத்துவம், அதுவே விடுதலை, அதுவே உண்மை சுயராஜியம்.

## வாலிபசகவாசசங்கம் திருச்செங்கோடு.

12-2-33 ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 4-30மணிக்கு சங்கக் கட்டிடத்தில் வாராந்திரக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அவ்வமயம் தோழர் ப லக்ஷ்மணன் அவர்களின் தலைமையின்கீழ் தோழர்கள் மகாலிங்கம் ருத்ரம் சங்கர லிங்கம் முதலாயினோர் மகாமகத்தை பகிஷ்கரிக்க வேண்டிய அவசியத்தை விரிவாக சொற்பொழி வாற்றினுர்கள் பின்னர் தலைவர் முடிவுரையுடனும், வந்தனோபச்சாரத்துடனும் கூட்டம் இரவு 9மணிக்கு இனிது கலைந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறுர்


**The Rational Books Publishing Society Ltd.**

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்.**

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட

3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்குமுன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

அப்ளிக்கேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ $2\frac{1}{2}$ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு: — விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
43, கச்சேரி வீதி, ஈரோடு.

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

"இத்தேச மக்களின் ஆத்மாவை அடிமைப்படுத்தி பிராமணர்களை உச்சஸ்தானத்தில் வைப்பதற்கென்றே, வர்ணாச்சிரம கொள்கை உண்டாயிருக்கிறதென்பதை உலகமக்கள் யாவரும் அறிவார்கள். ஜாதி பாகுபாடில்லாமல் இருந்த இத்தேசத்தில் வருணாச்சிரமத்தையும், அதை ஆதரிக்கும் கட்டுக்கதைகளையும் வருணாச்சிரம "ரிஷிகள்" சிருஷ்டித்தார்கள்."

"தாழ்த்தப்பட்டார் என்றவர்கள் விஷயத்தில் மட்டும் தீண்டாமை இருப்பதாக மகாத்மா இன்னும் கருதியிருப்பாரானால் மதிமோசம் போவார் என்பதில் சந்தேகமில்லை."

"பிராமணர்" முதல் "பஞ்சமர்" வரையில் பல்வேறு ஜாதியினருக்குள்ளும் தீண்டாமை. பாரமை போன்ற தோஷங்கள் இருந்து வருகின்றன. ஆகையால் ஜாதி வேற்றுமைகள் தொலைந்தாலன்றி தீண்டாமை ஒருநாளும் இத்தேசத்திலிருந்து நீங்காதென்பதை மகாத்மா காந்திக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இவர் கூறும் வருணாச்சிரமத்துக்கு என்ன பொருள் என்பது நமக்கு விளங்கவில்லை. மகாத்மா காந்தி அதை ஒரு போதும் விளக்கமுடியாது. ஆகையால் இவ்விஷயத்தில் தலையிட்டு, தவறான கருத்துக்களை வெளியிட்டு, பல்வேறு வகுப்பினருக்கு சாஸ்வதமான இழிவுகளை உண்டாக்காமல் இருக்கும்படி மகாத்மா காந்தியைக் கேட்டுக்கொள்ளுகிறோம். பிராமணரல்லாத ஹிந்துக்கள் குறிப்பாகத் தென் நாட்டில் வருணாச்சிரம விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கும்படி பிரார்த்திக்கிறோம்".

என்று எழுதியிருக்கிறதைப்பாராட்டுகிறோம்.

---

## மிஸ். பியர்ட் வரவேற்பு.

அமெரிக்கா கோடீஸ்வரரும், தர்மவானுமாகிய ராக்பெலரின் சங்கத்தைசேர்ந்த பியர்ட் சகோதரிகள் இருவரும் பெருந்துறைக்கு வெள்ளிக்கிழமை விஜயம் செய்தார்கள். சிசு தர்ம சாலையில் அநேக ஸ்திரிபுருஷர்கள் அவர்களைகுதூகலமாக வரவேற்று உபசரித்தனர். கிராமசீரமைப்புச்சங்கத்தின் காரியதரிசி தோழர் என். லக்ஷ்மணன் வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்தார். பியர்ட் சகோதரிகள் உருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

என ஒரு நிருபர் எழுதுகிறார்

---

## சென்னை

### மாதாந்தரக் கூட்டம் பிரம்பூர் பாரகஸ்.

12.2.33தேதி மாலை 4.30 மணிக்கு முன்னதாகவே வெங்கட்டம்மாள் சமாதிரோட்,பொன்னியம்மன் தெரு, தோழர். குப்புசாமி அவர்கள் இல்லத்தின் மேல்மாடியில் சங்க அங்கத்தினர்களும், சங்கத்தில் புதியதாக சேரவிருப்பமுள்ள தோழர்களும் கூடியிருந்தனர். அவ்வமயம் தலைமை வகிக்க வேண்டிய சங்கத்தலைவர் தோழர் வி. பி. எஸ். மணியர் அவர்களும் சங்க காரியதரிசிகளும் வராமையால் தோழர் கெ. சாமிநாதன் தலைமை வகித்து சர்குலரில் குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டபிறகு, தோழர்களான கெ. பொன்னரங்கம், "தற்கால இந்திய பெண்கள் நிலைமை" என்பதைப்பற்றியும், ஆர். பி. எழுமலை, "ஆதித்திராவிடர்கள் அரிஜனங்களா" யென்பதுபற்றியும் பேசிய பிறகு இரவு 8.30மணிக்கு மேல் கூட்டம் வெற்றிகரமாகமுடிந்தது.

### அடுத்த கூட்டம்

25-2-33 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வெங்கட்டம்மாள் சாமதி ரோட் பொன்னியம்மன் தெரு தோழர் குப்புசாமி அவர்கள் இல்லத்தின் மேல் மாடியில் கூடும். என்று சங்க அங்கத்தினர்கள் எழுதுகிறார்.

---

## தாழ்த்தப்பட்ட, இந்து கிறிஸ்துவர்களின் பொதுக்கூட்டம்.

திருச்சி புத்தூர் வண்ணாரப்பேட்டை மைதானத்தில் 12-2-33-ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30மணிக்கு தோழர் எஸ். நீலாவதியம்மையார் தலைமையின்கீழ் சுமார் ஆயிரம் மக்களைக்கொண்ட தாழ்த்தப்பட்ட இந்து கிறிஸ் அவர்களின் கூட்டம் ஒன்று கூடிற்று அதுசமயம் தோழர்களான ராமசுப்பிரமணியம், கே. வி. அழகிரிசாமி, தாலூகா போர்டு அங்கத்தினர் சிங்காரம், நகரசபை அங்கத்தினர் ஆர். மருதை, சன்னாசி, தி. திரவியம் ஆகியவர்கள் தீண்டாமை விலக்கின் அவசியத்தைப்பற்றியும், தீண்டாமைவிலக்கு கமிட்டியின் புரட்டைப்பற்றியும் பேசினார்கள்.

முடிவில் இந்நகரில் "கிறிஸ்தவ ஆலயசமத்துவ சங்கம்" என்றபெயருடன் ஒரு சங்கம் நிறுவுவதென்ற தீர்மானமும், "சமீபத்தில் கும்பகோணத்தில் நடைபெற விருக்கும் மகாமகம் இந்து மக்களை ஏமாற்றி பொருள் சம்பாதிப்பதற்காக வைதீகர்களும், ரயில் வேக்காரர்களும், வியாபாரிகளும் ஏராளமான விளம்பரங்களைச்செய்து கொண்டிருக்கிறபடியால் மக்கள் எவரும் ஏமாந்து செல்லாமலிருக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது" என்றதீர் தீர்மானமும் மக்களிடையே ஓட்டுக்கு விடப்பட்டு தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறிற்று (ஒரு நிருபர்.)

---


"வெடி குண்டு"

தனிப்பிரதி

விலை அரையணா

ஏஜண்டுகளுக்கு

மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரைகளும், சமூக சமுதாய அரசியல் செய்திகளுடனும் அச்சமற்ற ஆணித்தரமான அபிப்பிராயங்களையும் கொண்டு கிரவுன் 1-க்கு 2 சைசில் விசித்திர படங்கள் போட்டு 12 பக்கம், ரேப்பருடன் பிரதி ஞாயிறு தோறும் மதுரையிலிருந்து வெளியிடும் "வெடி குண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிக்கைக்கு எல்லா விடங்களிலும் விற்பதற்கு ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி விலை அரையணா. பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசா கமிஷன் கொடுக்கப்படும்; எத்தனை பிரதிகள் தேவையோ அத்தனை பிரதிகளின் நான்கு வாரத்திய தொகையை முன் பணமாக அனுப்பப்படாத ஏஜண்டுகளை பதிவு செய்து கொள்ளப்படமாட்டா. முன் பணம் வருடசந்தா ரூ இரண்டு. ஆறு மாதத்திற்கு ஒன்றேகால். வெளிநாடு வருஷசந்தா மூன்று.

A. S. ஆனந்தம்

மானேஜிங் எடிட்டர்

காரியாலயம் தெற்கு வாசல்

மதுரை.


---

## சென்னை.

### சுயமரியாதை இளைஞர்மன்றம்

மேற்படி மன்றத்தின் வாராந்திரக் கூட்டம் 12-2-33 ஞாயிற்றுக்கிழமை,மன்றத்தின் காரியாலயத்தில் தோழர் கே. என். நாதன் அவர்கள் தலைமையில் கூடிற்று. அதுசமயம் தோழர்கள் டி. சம்பந்தம், எம். வி. டி. சாமி, சி. தங்கராஜ், டி. துளசி, கே. கிருஷ்ணசாமி, டி. ராதா கிருஷ்ணன், எஸ். பிரகாசம், அ. பொன்னம்பலனார், டி. எஸ். நடராஜன், முதலியோர்கள் "சுயமரியாதையும், மூடப்பழக்கவழக்கமும்" "இளைஞர்கள் எம்முறையில் தொண்டாற்ற வேண்டும்"? என்பது பற்றி தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

([illegible]-ம் பக்கத்தொடர்ச்சி)

"பரலோக" பிராப்தி அடைவது (தூக்கிலிடப்படுவது) திண்ணம்.

பணப்பேய் பிடித்த வியாபாரிகளை நாம் இங்கு (இங்கிலாந்தில்) பார்லிமென்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கின்றோம். அவர்களைப் புகழுகின்றோம், வணங்குகின்றோம்.

இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள்ருஷிய அரசியல்முறையை பிரிட்டன் கைப்பிடித்தேயாகவேண்டும். அப்பொழுது அதையோர் சர்வாதிகாரி நின்று நடத்துதல்வேண்டும். அப்பொழுது தான் நாம் ஊக்கமுடன் வேலை செய்யமுடியும்.

---


## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி

இடுப்புவலி

பலக்குறைவு

ஆயாசம்

நரம்புத்தளர்ச்சி

சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலிய வைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பார்சல் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அன் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

# லெனினும் மதமும்

இது ரஷிய தேசத்தின் மதப்பித்தையும், பாதிரிகள் புரட்டையும் ஒழித்து, கொடுங்கோலரச குடும்பத்தை வேறுடன் வீழ்த்தி ஏழை பணக்காரத்தன்மையை அழித்து, தோட்டி முதல் தொண்டமான்வரை எல்லோருடைய வாழ்க்கையையும் ஒரே மாதிரியாக்கி தொழிலாளிகளால் தேசம் முழுவதும் ஆட்சி புரியும்படி செய்த ஒப்பற்ற பொது உடமைக்கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதை வாங்கிப் படிப்பவர்களுக்கு மதத்தைப்பற்றி சுயமரியாதை இயக்கத்தாரின் கொள்கை என்ன என்பதும், அவர்கள் என் தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில்லை என்பதும், பின்னை என் அவர்கள் நாஸ்திகப்பிரசாரம்செய்பவர்களாகக்காணப்படுகிறார்கள் என்பதும், சுயமரியாதை இயக்கக்காரர்கள் காங்கிரசையும், காந்தீயத்தையும், தேசியத்தையும் என் குற்றம் சொல்லுகிறார்கள் என்பதும், காந்தியின் குருவென்னும் டால்ஸ்டாயை ரஷியர்கள் என் வெறுத்தார்கள் என்பதும் நன்றாய் விளங்கும். மற்றும் தொழிலாளிகளும் சரீரத்தினால் பாடுபட்டு உழைக்கும் மக்களும், பாடுபட்டு அப்பாட்டின் பயன்பெறாமல் கஷ்டப்படக் காரணம் என்ன என்பதும், அவர்கள் விடுதலையடைய மார்க்கம் என்ன என்பதும் நன்றாய் விளங்கும். ஆகவே இப்புத்தகத்தை ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு சுயமரியாதைக்காரரும் அவசியம் படிக்கவேண்டியதாகும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கும், சுயமரியாதை சங்க அங்கத்தினர்களுக்கும் விலை அணா 0—3—0

விலையுடன் ஒரு அணா ஸ்டாம்பு சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**


## அமுத ரத்னாகரம்.

(சிறந்த தாது புஷ்டி லேகியம்)

ஐம்பொறிகளுக்கும் நல்ல வலுவைக் கொடுத்து, உயிருக்கு சிறந்த சக்தியைப்பெருக்கி, ஆயுளை வளர்க்கும். 40 நாள் சாப்பிட்டபின் உடலின் நிறை அதிகப்படா விட்டால் பணம் வாபஸ் தருகிறோம்.

40 நாளுக்கு ரூ. 4. 20 நாளுக்கு ரூ. 2—4—0.

## இன்பமணி.

நபும்சகம், தாது நஷ்டம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகளை நீக்கி, பூரண இன்பசுகம், வாலிபத்தன்மை, திட காத்திரம் ஆகியவைகளை அளிப்பதில் இதற்கிணையானவை வேறொன்றும் கிடையாது.

30 மாத்திரை ரூ. 5—0—0.

## ஜீரணாதி.

(ஒப்பற்ற மலச்சிக்கல் நிவாரணி)

உண்ட உணவைச் செரிக்கச் செய்து தினந்தோறும் மலத்தைக்கழிக்கும். மலச்சிக்கலினால் உண்டாகும் நோய்கள் எதுவாக இருந்தாலும் தவறாமல் குணமாக்கும். பசியின்மை, நெஞ்செரிவு, புளியேப்பம், வயிற்றுவலி, குன்மம், வாந்தி, அரோசியம், தூக்கமின்மை, அசதி ஆகிய நோய்களையும் கண்டிப்பாய் நீக்கும். விலை ரூ. 2.

சித்தானந்த வைத்தியசாலையில் செய்யப்பட்டது. சகல வியாதிகளுக்கும் உத்தரவாதமும், குணமுமுள்ள மருந்துகளிருக்கிறது. விபரத்திற்கு எழுதுங்கள். மலாய் நாட்டு வாசிகள் அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும். கியாட்லாக் இனாம்.

ஏஜண்ட், அருணகிரி அண் கோ., தபால் பெட்டி 222, நெ. 49 லிங்க செட்டி தெரு, சென்னை.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 5. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 6. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—0 |
| 7. | மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| | The crux of the Indian Problem By Dr. PARANJPYE (in English.) விலை ரூ. | 1—0—0 |
| | "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. | 0—8—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட் ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.


ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோ சாப்பிடுங்கள்

**தங்கபஸ்பம்**

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.
48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும், சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

தாளக பஸ்பம் - இருமலுக்கு.

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது.
புட்டி 1-க்கு ரூ. 4.

அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும்-நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15: வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் **மலையப்பசாமி,**
வைத்தியசாலை, பழனி, S. I.,


"புரட்சி ஓங்குக!
பொதுவுடைமை
தோணுக!!"


உங்கள்.

கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழுதல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுத்தால் ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St., Calcutta.



**பண்டிட் ஆனந்தரின்,**

அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய்; குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ண அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

# குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அநேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவற்று வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது மிக சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருந்தா மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, பசுக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும் — நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். , கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபே எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

## மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.